வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

வார மலர் 

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 354 | பக்கங்கள் : 20


07 ருவாண்டாவுக்கு அனுப்பப்படும் தமிழ் அகதிகள்!


08 ஜனாதிபதி ரணிலும் எதிர்கால “அறகலயவும்”


09 காண்டீபன் அமிர்தலிங்கம்!


10 அதிகாரப்பகிர்வு பேச்சுவார்த்தை என்பதுஅதிகார ஆட்சிச் சவாரிக் கான ஆரம்பமா?

# மாவீரர் நாள் இன்று!

## வடக்கு-கிழக்கு துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் ஏற்பாடுகள் பூர்த்தி



யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று மாலை நடைபெற வுள்ள மாவீரர் நாளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மாவீரர்களை நினைவேந்த அனைத்து துயிலும் இல்லங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் இணைந்து உணர்வுபூர்வமாக ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

19



# வல்வெட்டித்துறையில் பிரபாவின் பிறந்தநாள்

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபா கரனின் 68ஆவது பிறந்தநாள் நிகழ்வு வல்வெட் டித்துறையில் முன்னாள் பாராளுமன்ற முன் னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால்

19

# கூட்டமைப்பை ஒற்றுமையாக கொண்டு செல்லத் தீர்மானம்

## நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்காளிக் கட்சி தலைவர்கள் இணைந்து முடிவு

யாழ்ப்பாணம், நவம்பர் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள முரண்பாடுகள் - குறைபாடுகள் ஆகியவற்றைக் களைந்து தொடர்ந்தும் ஒற்றுமையுடன் நகர்த்திச் செல்வது என அதன் பங்காளிக் கட்சித் தலைவர்கள் இணைந்து நேற்றுக் கூட்டாக முடிவெடுத்தனர்.

19

# வடக்கு ஆளுநருக்கு எதிராக ரணிலிடம் முறையிடுவோம்!

## அவைத் தலைவர் சி.வி.கே தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கு ஆளுநரால் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டம் தொடர்பில் ஜனா திபதியிடம் முறையிட உள்ளோம் என வடக்கு மாகாண அவைத் தலைவர்

19

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்?

கொழும்பு, நவ. 27

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீர சிங்க, அடுத்த ஜனாதி பதி வேட்பாளராக வருவார் என்று நம்புவ தாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷுமார சிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கி யின் ஆளுநரிடம் இவ்வாறான

19



# பிரபாகரனின் பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்த யாசகர்

யாழ்ப்பாணம், நவ. 27

நல்லூர் கந்தன் ஆலயம் முன்பாக யாசகம் பெறும் ஒருவர் நேற்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிர பாகரனின் 68ஆவது பிறந்ததினத்தை இனிப்பு கொடுத் துக் கொண்டாடி மகிழ்ந்தார்.

அவர் தனது சொந்தச் செலவில் இனிப்பு களை வாங்கி ஆலயத்துக்கு வருவோருக்கு

19

# பட்ஜெட்டால் மீனவருக்கு எந்த நன்மையும் இல்லை!

மன்னார், நவ. 27

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன் வைக்கப்பட்ட அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுத் திட்ட முன் மொழிவுகளில் மீன் பிடித் தொழில் தொடர் பில் கவனம் செலுத்தப் படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி யினால் முன் வைக்கப்பட்ட

19

# ரணிலுக்கு ஆதரவு குறைகிறதா?

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவுத் தளம் குறைந்து வருகின்றதா என்று கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார இறுதி ஏடு ஒன்று கேள்வி எழுப்பி உள்ளது.

நேற்று சனிக்கிழமை வெளியாகிய அந்த வார இறுதி ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும்

19

# 13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த அரசு ஆர்வம்

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, நவ. 27

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ளார்.

வியொன் ஊடகம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே

19

## இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அரசியல் கட்சிகள், பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல் நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றன. எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஒரு தேர்தல் வேண்டும். அப்போதுதான் இன்றைய நிலையில் தாம் தற்போது இருப்பதைவிட அதிகமான இடங்களில் வெற்றி பெறமுடியும்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைய விருக்கின்றது. அதற்கு தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தயாராக இருக்கின்றபோதிலும் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைப்பதற்காக - எல்லைகளை மறுசீரமைப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டு அது தனது பணியை தொடக்கிவிட்டது.

உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைப்பதற்காகவே அரசாங்கம் இதுபோன்ற திருத்தங்களை செய்கின்றது என்று எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்து வருகின்றன.

ஏற்கனவே, மாகாண சபைகளின் தேர்தல்களை ஒத்திவைப்பதற்காகவே, தேர்தல் சட்டத்திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்ட அனுபவம் அந்த அரசில்வாதிகளுக்கு இருக்கின்றது. அதுவும் இவர்களை இப்படி உஷார்படுத்தி வருகின்றது.

ஆனால் ஜனாதிபதியோ இப்போது தேர்தல் ஒன்றை நடத்தக்கூடிய நிலையில் நாடு இல்லை என்பதை திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்.

உள்ளூராட்சி தேர்தல்களைப் பொறுத்தவரை கடைசியாக நடைபெற்ற தேர்தல் முறையில் பலருக்கும் உடன்பாடு இல்லை. கடைசியாக கலப்பு தேர்தல் முறையில் நடந்த தேர்தலில் பல சபைகளில் அதிக இடங்களை வென்றவர்களாலும் ஆட்சியமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அதனால்தான் தற்போதைய மொத்த உள்ளூராட்சி உறுப்பினர்களின் தொகையை ஐம்பது வீதத்தால் குறைக்கவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தபோதும் பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

ஆனால் அப்படி குறைப்பதெனில் அதற்காக வட்டாரங்களின் எல்லைகளை மாற்றி அவற்றை அரைவாசியாக குறைக்கவேண்டும். அதனைச் செய்வதற்கே முன்னாள் தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பணி மார்ச் மாதத்தில் முடிந்தால் மாத்திரமே உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்த முடியும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டுமானாலும், புதிய சட்டத்தின்கீழ் நடத்துவதென்றால், அதற்காக மாகாண சபைக்காக தேர்தல் தொகுதிகளை புதிதாக அமைக்க வேண்டும். ஆனால் அது இப்போதைக்கு சாத்தியமானதல்ல. ஆனால் பழைய தேர்தல் முறையிலேயே மாகாணசபைக்கு தேர்தல் நடத்துவது என்று பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் தீர்மானம் ஒன்றை போட்டாலே தேர்தல்களை நடத்த முடியும்.

இப்போது எந்தத் தேர்தல் எப்போது என்பது ஒவ்வொருவர் மத்தியிலும் கேள்வியாக தொக்கி நிற்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, தேர்தல் நடத்தக்கூடிய நிலையில் நாடு இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறார்.

அவர் தேர்தல் ஒன்றை சந்திக்க இப்போது விரும்பமாட்டார் என்பதும் ஊகிக்கக்கூடியதே. ஆனாலும் அவரும் மறைமுகமாக தேர்தல் ஒன்றிற்கு தயாராகிறாரா என்றும் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் புத்துயிரூட்டும் முயற்சியாக - அவர் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரை தேடிச் சென்று ஒன்று திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய தேசிக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமான ஜோசப் மைக்கல் பெரேராவின் வீட்டுக்கு சென்று அவர் கதவை தட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமை இதனை வெளிப்படுத்தியுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி ரணில், ஜா-எல தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவின் வீட்டிற்கு சென்றிருந்தார். அப்போது வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. கேற்றைத் திறக்க பல தடவை வாகனத்தின் ஹோர்ண் அடித்தாலும் யாரும் திறக்க வரவில்லை.

பின்னரே அவரின் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, ரணில் வந்திருக்கின்ற விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதன்பின்னரே கதவு திறக்கப்பட்டு அவரால் உள்ளே செல்லமுடிந்திருக்கின்றது.

ஜோசப் மைக்கல் பெரேரா தன் எதிரே அமர்ந்தவுடன், “உங்கள் வீட்டுக்கு ஏன் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை?” என்று ரணில் கேள்வி எழுப்பியதும், “இல்லை சேர், நான் இப்போது அரசியலில் ஈடுபடுவதில்லை“ என்று பதிலளித்திருக்கிறார் அவர்.

“அது எப்படி? அதுவும் முன்னாள் சபாநாயகராகவும் அமைச்சராகவும் இருந்தவர் நீங்கள். உங்களின் பாதுகாப்பிற்காக பல பொலிஸ் அதிகாரிகளின் சேவை வழங்கப்பட்டிருக்க வேண்டும்” என்று ரணில் தெரிவித்திருந்தாராம்.

ஒரு தடவை அமைச்சரவையில் இருந்தால்கூட வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வழங்கப்படுவது வழக்கமானது. அந்நிலையில் பல தடவை அமைச்சராக இருந்தவர், சபாநாயகராகவும் இருந்தவர் அவர். யோசப் மைக்கல் பெரேராவை எதுவித முன் அறிவித்தலும் இன்றி ரணில் சந்தித்திருப்பது அவர் தனது கட்சியை மீண்டும் புத்துயிர் ஊட்ட தொடங்கிவிட்டார் என்பதையே காட்டுகின்றது என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள். தேர்தல் நடக்காது என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் அவர் அதற்கான ஆயத்தங்களையும் செய்யாமல் இல்லை.!

**- ஊர்க்குருவி**

# முஸ்லிம் புத்திஜீவிகள் உடனடி செயற்பாட்டில் இறங்கவேண்டும்

கொழும்பு,நவ.27



அதிகாரப் பகிர்வு விடயத்தில் முஸ்லிம் புத்திஜீவிகள் செயற்பாட்டில் இறங்க வேண்டும் என சட்ட முது மாணியும் முஸ்லிம் அரசியல் பிரமுகருமான வை.எல். எஸ்.ஹமீட் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

ஜனாதிபதி அதிகாரப் பகிர்வு விடயத்தில் சாதக மான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். சூழ்நிலைகள் பலவந்தப்படுத்தினாலே யொழிய ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெற வாய்ப்பிருக்கிறது. ஆனாலும் உரிய காலத்திற்குமுன் நடத்தமுடியாது.

எது எவ்வாறிருந்தபோதிலும் ஜனாதிபதித் தேர்தலை மனதிற்கொண்டு ஒரு தீர்வினைத் தமிழ்தரப்பிற்கு வழங்க ஜனாதிபதி முனைப்புக்காட்டுவது புரிகிறது. 2/3 பெரும்பான்மை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதையும் இப் பொழுது அறுதியிட்டுக் கூற முடியாது.

இந்நிலையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் முஸ் லிம்களின் நிலைப்பாடு என்ன? முஸ்லிம் சமூகத் திற்கு மத்தியில் இதுவரை தெளிவான நிலைப்பாடுகள் இல்லை. அதிகாரப்பகிர்வு என்பது வடக்கு - கிழக்கு இணைப்பு, பிரிப்பு சம்பந்த மானது என்பதே பலரது பார்வையாக இருக்கின்றது. அதற்கு அப்பால் எதுவும் தெரியாது. அதுப்பற்றி சிந்திப்பதற்கும் ஆயத்தமில்லை.

இதில் மிகவும் பரிதாபகரமான நிலை என்னவென்றால் வட - கிழக்கிற்கு வெளியில் வாழும் சாதாரண முஸ்லிம்கள் மட்டுமல்ல சில புத்திஜீவிகள்கூட, அதிகாரப் பகிர்வு வட-கிழக்கிற்கே தாக்கம் செலுத்தக்கூடியது அதற்கு வெளியே அல்ல என்றுதான் நினைக்கிறார்கள். அதிகமான மலையகத் தலைவர்களும் அவ்வாறே நினைக்கிறார்கள். வட - கிழக்கைவிட வெளியே வாழுகின்ற சிறுபான்மைகள் மீதுதான் அதிகாரப்பகிர்வு பாரதூரமான எதிர்மறைத் தாக்கத்தைச் செலுத்தப் போகிறது என்பதை ஏனோ அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதிகபட்ச அதிகாரப் பகிர்வு முஸ்லிம்களுக்கு மிக வும் ஆபத்தானது. சமஷ்டி அதைவிட பேராபத்தானது என்பது தொடர்பில் சமூகத் திற்கு எந்த விழிப்புணர்வும் இல்லை. கண்மூடித்தனமாக அரசியல் தலைமைகளை நம்பும் ஓர் சமூகமாக முஸ் லிம் சமூகம் உள்ளது.

சமூகத்தில் எதுவித அக்கறையுமற்ற அரசியல் தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம். தலைவர் மறைந்து 22 வருடங்கள் கடந்துவிட்டன. இன்னும் தலைவரின் பெயரைச் சொல்லி அரசியல் செய்யும் கட்சிகள் சமூகத்திற்காக தீர்த்துக்கொடுத்த பிரச்னை எதுவுமில்லை.

முஸ்லிம்களில் அன்றி தமிழ்த்தரப்பில் அதிக அக் கறைகொண்ட முஸ்லிம் தலைவர்களைக்கொண்ட சமூகம் நாம். தமிழர் கோருகின்ற வட-கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கத்தை வழங்க இந்தியாவுக்கு அழுத்தம் வழங்க, கடிதம் எழுதி கையொப்பம் வைக்கமுனை யும் தலைவர்களைக் கொண்ட சமூகம் நாம்.

கல்முனையைக் கூறு போட எத்தனிக்கும் தமிழ்த் தலைவர்களிடமிருந்து கல்முனையைப் பாதுகாத்துத்தர, அதற்காக உருப்படியான ஒரு பேச்சை பாராளுமன்றத்தில் பேசுவதற்குக்கூட வக்கற்ற தலைவர்களைக் கொண்ட சமூகம் நாம்.

இந்நிலையில், ஏற்க னவே, நல்லாட்சியில் வரையப்பட்ட யாப்பு வரைபில் பல விடயங்கள் முஸ்லிம்க ளையும் மலையகத் தமிழர்களையும் பாதிக்கக் கூடியா தாய் இருக்கின்றன. சமஷ்டிக்கும் மேலான அதிகாரப் பகிர்வு அதில் முன்மொழியப்பட்டிருக்கின்றது.

எனவே, அதகாரப்பகிர்வுக்கான முஷ்தீபுகள் நடை ஸ்ரீபெறும் இச்சந்தர்ப்பத்தில் அரசியல் தலைமைகளை நம்பி முஸ்லிம் சமூகம் ஏமாந்துவிடக்கூடாது. நாம் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு எதிரானவர்களல்ல, ஆனால் அது முஸ்லிகளை ஓர் இருண்ட யுகத்திற்குள் தள்ளிவிடக்கூடாது.

ஏதோ ஓர் தீர்வுத்திட்டம் வரப்போகிறது. அது நிறை வேறுமா? நிறைவேறாதா? என்பது வேறுவிடயம். அவ்வாறு தீர்வுத்திட்டம் வெளிவரும்போது நாம் தடுமாறிக்கொண்டிருக்க முடியாது. 21 ஆவது திருத்தத்தில் அரசியலமைப்பு சபையில் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் வரக்கூடிய விதத்தில் ஒரு வரியை சேர்க்க வக்கற்ற தலைவர்கள்தான் நம் தலைவர்கள். கோட்டாவின் 20 இன் பாராளுமன்ற சபையில் ஒரு முஸ்லிம் வருவதை உறுதிப்படுத்தக்கூடிய சரத்து இருந்தது. ( அந்த சபைக்கு அதிகாரம் இருந்ததா? இல்லையா? என்பது வேறுவிடயம்)

எனவே, இந்த சூழலில் புத்திஜீவிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒன்று சேர வேண்டும். தீர்வுத்திட்டத்தில் நமது உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்கள் எவ்வாறு இடம் பெறவேண்டும் என்பதை அடையாளம் காண வேண்டும். பின்னர் பல பிரதேச புத்திஜீவிகளை இணைத்த ஒரு சம்மேளனம் உருவாக்கப்பட்டு அவற்றில் ஒரு பொது நிலைப்பாடு எட்டப்படவேண்டும்.

அதனை முஸ்லிம் கட்சிகளிடம் சமர்ப்பித்து அதுவே அவர்களின் நிலைப்பாடாகவும் இருக்கவேண்டும். அதேபோன்று, அரசிடமும் எதிர்க்கட்சிகளிடமும் அந்நிலைப்பாட்டை சமர்ப்பித்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தயவுசெய்து பஸ் போன பின் கைகாட்டாமல் இப் பொழுதே புத்திஜீவிகள் செயற்பட முன்வரவேண்டும் - என்றுள்ளது. (அ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

“பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கின்றது
பாட்டன் நட்ட பலா மரமும் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்”

*- கவிஞர் புதுவை இரத்தினதுரை*

## மிளகாய் தூளில் கலப்படம்

கொழும்பு, நவ. 27

சந்தைக்கு மிளகாய்த் துண்டுகள் மற்றும் மிளகாய்த் தூளை விநியோகித்துக் கொண்டிருந்த லொறியொன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

அம்பலாங்கொடை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையில் மிளகாய் தூள் மற்றும் மிளகாய் துண்டுகளில், 50 சத வீத மான உப்பு, கோதுமை மா மற்றும் கலரிங் கலக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன் மாதிரிகளை இரசாயன பரிசோதகருக்கு அனுப்பி கிடைக்கப்பெற்ற அறிக்கையில் இது தொடர்பில்தெரியவந்துள்ளது.

மக்கள் உட்கொள்ளும் உணவு வகைகளில் இவ்வாறான விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் மக்கள் நோய்களுக்கு ஆளாக நேரிடுவதாக அம்பலாங்கொடை பொதுச் சுகாதார பரிசோதகர் ஹன்சிக நதீஷ் தெரிவித்தார். (அ)

# மதுப் பாவனை 30 வீதம் குறைவு

## ஆனால் வருமானம் 20 வீதம் அதிகரிப்பு

கொழும்பு,நவ. 27

**நாட்டில் மது பாவனை குறைந்துள்ள போதிலும் கலால் திணைக்களத்தின் வருமானம் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் செயன்முறை அறிமுகம் செய்தமையை தொடர்ந்து வருமானம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஆண்டின் முதல் 10 மாதங்களில்இ வருமானம் 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் உறுதிப்படுத்தினார்.

தரவுகளின்படிஇ பல்வேறு காரணங்களால் மதுபான தேவை சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளைஇ ஜனவரி முதல் நாட்டில் உரிமம் பெற்ற மதுபான உற்பத்தி நிலையங்கள் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என கலால் திணைக்களம் கூறியுள்ளது.

இதன் மூலம் மதுபானங்கள் மீது விதிக்கப்படும் வரிகளை அரசாங்கம் எவ்வித முரண்பாடுகளும் இன்றி வசூலிக்க முடியும் என அத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். (அ)

# பழைய தேர்தல் முறைக்கு திரும்பி தேர்தலை நடத்துக!

## எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்புஇ நவ. 27

முன்னைய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல கேட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், அதனை குறைக்கவேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விருப்பு வாக்கு முறையின் கீழ் நடத்த முடியும் என்றும் முன்னைய தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை நடத்த தாம் ஆதரவு என்றும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வதற்கு கணிசமான கால அவகாசம் தேவைப்படும் என்றும் எல்லை நிர்ணயத்தை முன்னெடுக்காமல் தேர்தலை நடத்துமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# மட்டு.,அம்பாறை மாவட்டங்களில் இன்று 5 இடங்களில் மாவீரர் தின நினைவேந்தல்

மட்டக்களப்பு, நவ. 27

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 5 இடங்களில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

துயிலும் இல்லங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை சரியாக பி.ப 6.05 மணிக்கு பொதுச்சுடர், நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு துயிலும் இல்லங்கள் உள்ளன.

1) மாவடிமுன்மாரி துயிலும் இல்லம்.

2) தாண்டியடி துயிலும் இல்லம்.

3) தரவை துயிலும் இல்லம்.

4) வாகரை கண்டலடி துயிலும் இல்லம்.

இந்த நான்கு துயிலும் இல்லங்களில் தாண்டியடி துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் உள்ளதால் தாண்டியடி சந்தியில் உள்ள பிரத்தியேக இடத்திலும், ஏனைய மூன்று துயிலும் இல்லங்களில் அதே துயிலும் இல்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக இடம்பெறவுள்ளன.


விரும்பிய நான்கு இடங்களில் அனைவரும் அவரவர் வசதிக்கு அமைவாக கலந்து கொண்டு உயிர்நீத்த எமது உறவுகளுக்கு மனதார தீபங்களை ஏற்றி அஞ்சலி வணக்கம் செய்ய முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்திற்கு அம்பாறை மாவட்ட எமது மக்கள் கலந்து கொள்ள முடியும்-என்றார். (அ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் பிரபாகரனின் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 68ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுக் கொண்டாடப்பட்டது.




யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள பிரத்தியேக இடமொன்றில் ஒன்றுகூடிய மாணவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தை வைத்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# மாவீரர் நிகழ்வை நடத்தவேண்டாம்!

## திருக்கோவில் பொலிஸார் எழுத்து மூலம் அறிவிப்பு

அம்பாறைஇ நவ. 27

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடக்கவிருக்கும் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதில் இருந்து தவிர்க்குமாறும் அதிலிருந்து உடனடியாக விலகி நிற்குமாறும் திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபனுக்கு இந்த அறிவுறுத்தல் கடிதம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று 27ஆம் தேதி கஞ்சிகுடிச்சாறு புலிகள் இயக்கத்தின் மயான பூமியில் புதைக்கப்பட்டுள்ள மரணித்த புலிகளை நினைவு கூரவுள்ள மாவீரர் தின நிகழ்வுகளை செயல்படுத்தவேண்டாம் என்று அவர் கேட்டுள்ளார்.

மேலும், அந்த மயான பூமியில் புதைக்கப்பட்டுள்ள மரணித்த புலிகள் இயக்க உறுப்பினர்களின் தாய் தந்தை மற்றும் உறவினர்களால் மீண்டும் புலிகள் இயக்கத்தை எழுச்சி பெறும் வகையில் இறந்த உறுப்பினர்களை நினைவு கூரும் வகையில் நடத்த இருக்கின்ற மாவீரர் தின நிகழ்வுகளை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2011 .08. 29ஆம் தேதி இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1721(02) கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் புலிகள் இயக்கம் தொடர்பான எந்த வித செயல்பாடுகளோ நிகழ்வுகளோ நடத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவே அதை மீறி இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொண்டால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என திருக்கோவில் போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (அ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் முதன்முதலாக கணினி விஞ்ஞானத்தில் 2 பேராசிரியர்கள்!

யாழ்ப்பாணம்இ நவ. 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.





கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை, காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி ஏ. ரமணன், கலாநிதி எம் சியாமளன் ஆகியோரின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன்இ சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோர் கணினி விஞ்ஞானத்தில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத் துறை தாபிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இவர்கள் இருவரும் முதன் முதலாக கணினி விஞ்ஞானத் துறையில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## மாகாண ஆளுநராவதற்கு ஆசைப்படும் அமரதுங்க!



கொழும்பு, நவ. 27

தாம் ஆளுநர் பதவியை எதிர்பார்ப்பதாக முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், எனக்கு தற்போது ஜனாதிபதி ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது. நான் ஆளுநர் பதவியையே எதிர்பார்க்கிறேன். அடுத்த மாதம் அந்தப் பதவி கிடைக்கும் என நினைக்கிறேன்.

ஆளுநர் பதவி கிடைத்தால், நான் அதனை மகிழ்ச்சியுடன் பொறுப்பேற்று நாட்டு மக்களுக்கு என்னால் முடிந்த சேவைகளை செய்வேன் -என்றார். (அ)

## எச்.ஐ.வி சோதனைக்காக மாதாந்தம் 60 பேர் பதிவு

கொழும்பு, நவ. 27

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு சேகரித்துள்ள தரவுகளின் படி ஒரு மாதத்துக்கு குறைந்தது 60 பேர் எச்.ஐ.வி பரிசோதனைக்காக இணையத்தில் பதிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரும் எச்.ஐ.வி பரிசோதனைக்கான நேரத்தை முன்பதிவு செய்ய முடியும் என பாலுறவு நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நிமாலி ஜயசூரிய தெரிவித்தார். (அ)

## மகளிர் துடுப்பாட்ட அணியின் தலைவி 9 பாடங்களில் சித்தி!



கொழும்பு, நவ. 27

இலங்கை பெண்கள் தேசிய துடுப்பாட்ட அணியைச் சேர்ந்த விஷ்மி குணரட்ன (வயது 17) இந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த பொதுப் பரீட்சையில் 9 பாடங்களில் சித்தியடைந்துள்ளார்.

கம்பஹா ரத்னாவலி பெண்கள் கல்லூரி மாணவியான இவர், இலங்கையின் 19 வயதுக் குட்பட்ட துடுப்பாட்ட அணியின் தலைவராகவும் உள்ளார்.

இந்தியாவில் தற்போது நடைபெற்று வரும் 19 வயதுக் குட்பட்ட பெண்கள் துடுப்பாட்ட அணியின் தலைவராகவும் அவர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தியா-பாக். மோதலால் அயல்நாடுகளுக்கு பாதிப்பு

### பங்கலாதேஷில் கூறினார் அலி சப்ரி

**சிட்டகொங், நவ.27**

**பிராந்தியத்தில் உள்ள முக்கிய நாடுகளுக்கு இடையேயான அதிகாரப் போட்டி, தெற்காசிய நாடுகளைப் பெரிதும் பாதித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

பங்களாதேஷ் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யாமல் தெற்காசிய நாடுகள் முன்னேற முடியாது.

உலகளாவிய ரீதியில், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு போன்றன ஒரு பிராந்தியமாக ஒன்றிணைந்து வளர்ச்சியடைகின்றன.



எனவே இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடத்தி ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும். அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தங்கள் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு பொதுவான திட்டத்தில் செயல்பட்டால், அது பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும்- என்றார். (அ)

## பொருளாதார நெருக்கடிக்கு எதிராக நீர்கொழும்பில் கையெழுத்து வேட்டை





கொழும்பு, நவ. 27

பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிராக சுதந்திரத்திற்கான பெண்கள் இயக்கம் நேற்று சனிக்கிழமை நீர்கொழும்பு ரயில் நிலையம் முன்பாக வார இறுதிச் சந் தைக்கு அருகில் கையெழுத்து பெறும் நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்நிகழ்வு நேற்று முற்பகல் 11.00 மணி அளவில் ஆரம்பமானது.

அரசாங்கத்துக்கு எதிராக கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இந்த அமைப்பினர் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுர விநியோகத்தை மேற்கொண்டதுடன் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னை தொடர்பாக வும் விலைவாசி அதிகரிப்பு தொடர்பாகவும் ஒலிபெருக்கி மூலம் விளக்கம் அளித்தனர்.

அத்துடன் இது தொடர்பாக தயாரிக்கப் பட்டிருந்த பதாதையில் பொதுமக்களின் கையெழுத்தையும் பெற்றுக் கொண்டனர். (அ)

## தேர்தலில் வெற்றி பெற்ற ஹிட்லர் முகவரி இல்லாமல் இருக்கின்றார்

### டிலான் பெரேரா சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 27

வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று அங்கிருந்து இராஜினாமா கடிதத்தை கையளிக்க வேண்டிய நிலை தேர்தலில் வெற்றி பெற்ற ஹிட்லருக்கு ஏற்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் தற்போது முகவரியின்றி தேர்தலில் தோல்வியடைந்த ஹிட்லராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே டிலான் பெரேரா இதனைக் கூறினார்.

இருப்பினும், ஹிட்லர் எப்படி இறந்தார் என்பதை இவர்கள் அனைவரும் அறிய விரும்புகிறார்கள். அடோல்ப் ஹிட்லர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்தார் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

## 22 கரட்டுக்கு மேல் தங்கநகை அணிந்து இலங்கை வர தடை

கொழும்பு, நவ. 27

பயணிகள் 22 கரட்டுக்கு மேல் தங்க நகைகளை அணிந்து கொண்டு நாட்டிற்குள் நுழைய தடை விதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் வருவதற்கு முன்னர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் ஜெனரலிடம் அனுமதி பெற்றால் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் தங்கம் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் பயணிகள் தங்க நகைகள் அணிந்து வருவதற்கு தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு அல்லது சாதாரண பயணிகளுக்கு இந்த புதிய கட்டுப்பாடு பொருந்தாது என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## பாராளுமன்றத்தை கலைக்கவேண்டும்

### ஜனாதிபதியிடம் கோரும் இலங்கைத் திருச்சபை

கொழும்பு, நவ. 27

அரசியலமைப்பு ரீதியாக கூடிய விரைவில் பாராளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக இலங்கை திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டம் தெரிவித்துள்ளது.

மக்கள் தமது தேவைகளை பிரதிபலிக்கக்கூடிய புதிய பாராளுமன்றத்தை தெரிவு செய்ய முடியும் என மறைமாவட்டம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் மாற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் இளம் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகக் குழுக்கள், மதத் தலைவர்கள் மற்றும் ஏனையோரைச் சட்டத்தரணிகள் சங்கம் பாராட்டுவதுடன், எதிர்காலத்தில் அவர்களின் முக்கியமான பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும் என கொழும்பு ஆயர் துஷாந்த ரொட்ரிக்கோ விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
27.11.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## யார் அந்த மூன்றாம் தரப்பு?

தமிழ் தேசியக் கட்சிகள், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடியிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையொன்று தொடர்பில் ஆராய்ந்துவருகின்ற சூழலில்தான், இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை. ஒருவேளை காங்கிரஸ் கலந்துகொண்டாலும் கூட, உருப்படியான பங்களிப்புக்களை வழங்குமாவென்பது கேள்விக்குறிதான். எவ்வாறெனினும், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழ் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் கலந்துரையாடியிருப்பது வரவேற்கவேண்டியதொரு விடயமாகும். கொழும்பை எதிர்கொள்ளும் நோக்கில், தமிழ்க் கட்சிகள் தங்களை ஓர் அணியாக்கிக்கொள்வதும், தமிழர்கள் ஒரு தரப்பென்பதை அடையாளப்படுத்துவதும் முக்கியமானது. இந்த விடயத்தை ஈழநாடு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பயணிக்க வேண்டும். தங்களுடைய சொந்த கட்சிநலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவதை முற்றிலுமாக கைவிடவேண்டும்.

இந்த சந்திப்பின்போது மூன்றாம் தரப்பின் பங்களிப்பு தொடர்பிலும் பேசப்பட்டிருக்கின்றது. இலங்கைத் தீவின் இனப்பிரச்னை வரலாற்றில், மூன்றாம் தரப்பின் தலையீடுகள் புதிய விடயமல்ல. இரண்டு தடவைகள் மூன்றாம் தரப்பின் தலையீடுகள் நிகழ்ந்திருக்கின்றன. முதலாவது இந்தியாவின் தலையீடு. இரண்டாவது, நோர்வேயின் ஊடான மேற்குலக தலையீடு. மேற்படி இரண்டு தலையீடுகளின் போதும், தமிழர்களின் அரசியல் ஆயுதபலத்தை கொண்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து, மீண்டும் யுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து, நோர்வேயின் தலையீடு முடிவுக்கு வந்தது. ஆனால் இந்தியாவின் தலையீடு அப்படியல்ல. அது இப்போதும் எப்போதும் நிலைத்துநிற்கக் கூடிய இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கொண்டிருக்கின்றது. இன்றும் இந்தியா அந்த ஒப்பந்த அடிப்படையில்தான், இலங்கையின் உள்விவகாரம் தொடர்பில் அபிப்பிராயங்களை கூறிவருகின்றது. அபிப்பிராயங்களை கூறுவதற்கான சட்ட உரித்தை குறித்த ஒப்பந்தம் வழங்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியப் படைகளுடன் இராணுவ ரீதியாக மோதியதைத் தொடர்ந்து, இந்தியா, ஈழத் தமிழர் விடயத்தில் தலையிடுவதை முற்றிலுமாக தவிர்த்திருந்தது. அதன் பின்னர், இந்தியாவை அணுகும்போது மட்டுமே, இந்தியா அபிப்பிராயங்களை கூறியிருக்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கினால், 1990 - 2009 வரையில், இந்தியா பிரத்தியேகமாக எந்தவொரு ஈடுபாட்டையும் காண்பித்திருக்கவில்லை. நோர்வேயின் தலையீட்டுக் காலத்திலும் இந்தியா பார்வையாளராக மட்டுமே இருந்தது. ஆனால் இந்தியாவின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது, அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால், நிலைமைகள் சடுதியாக மாற்றமடைந்துவிடும் என்பதை துல்லியமாக மதிப்பிட்டே, நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஒவ்வொரு விடயங்களையும் இந்தியாவிற்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். இலங்கை விவகாரம் ஒரு சிக்கலான பிரச்னை, இதற்குள் ஒரு கட்டத்திற்கு மேல், நோர்வேயினால் பங்களிப்பை வழங்க முடியாதென்னும் அப்பிராயத்தையே இந்தியா கொண்டிருந்தது. மார்க் செல்டர் எழுதிய, "ஒரு உள்நாட்டு யுத்தத்தின் முடிவுக்கு" என்னும் நூலில் இந்த விடயங்கள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்த பின்புலத்தில் நோக்கினால், இந்தியாவை தவிர்த்து எந்தவொரு மூன்றாம் தரப்பு தலையீடு செய்தாலும் கூட, அதனால் எந்தவொரு நன்மையும் கிடக்கப்போவதில்லை. இதுவரையான வரலாற்று அனுபவம் நமக்கு இதனையே உணர்த்துகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், மூன்றாம்தரப்பு என்னும் பேச்சு வந்தால் தமிழர்களின் தெரிவு இந்தியாதான். ஒரு வேளை, இந்தியாவிற்கு சில சங்கடங்கள் இருப்பின், இந்தியாவின் பரிந்துரையில் பிறிதொரு தரப்பை அணுகலாம். அவ்வாறில்லாது, இந்தியாவை தவிர்த்துவிட்டு செல்ல முற்பட்டால், ஒரு கட்டத்திற்கு மேல் எதுவும் நகராது. நோர்வேயின் மத்தியஸ்த காலத்தில் கூட, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவை முறையாக அணுகியதற்கு சான்றுகள் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான், நிலைமைகள் கையை மீறிச் செல்வதை உணர்ந்த அன்ரன் பாலசிங்கம், 2006இல், NDtv என்னும் இந்திய தொலைக்காட்சிக்கு நேர்காணலொன்றை வழங்கியதன் மூலம், இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தார். அந்த நேர்காணலில் விடுதலைப் புலிகளின் தவறுகளுக்கு பாலசிங்கம் மன்னிப்பு கோரியிருந்தார். ஆனால் அப்போது நிலைமைகள் அதிகம் மாற்றமடைந்திருந்தது.

எனவே இந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால், மூன்றாம் தரப்பொன்றின் தலையீட்டுக்கான தேவையேற்படுமாக இருந்தால், தமிழ் தேசியக் கட்சிகள் இந்தியாவிற்கு பகிரங்கமான அழைப்பை விடுக்கவேண்டும். இந்தியாவின் மத்தியஸ்தத்தை கோரவேண்டும்.

# ஓர் அப்பனுக்கு சத்தியசோதனை வைத்த மகள்!

அறிவிழி அப்பா

க.பொ. த. சாதாரண தர தேர்வின் இறுதி நாள் மாலையாகியும் இவள் வீட்டுக்கு வரவில்லை. விசாரித்ததில் இன்று தேர்வுக்கு வரும்போது பை கொண்டு வந்ததாகவும் அதற்குள் உடுப்புகள் இருந்தன என்றும் சக மாணவிகள் கூறினர். இரு நாள் தேடுதலின் பின் இளம்பரிதியை சந்திக்க முடிந்தது. அவர், "இவள் இயக்கத்துக்குத்தான் வந்திருக்கிறாள்" என்று கூறினார். தொடர்ந்து, "நாங்கள் என்ன செய்ய வேணுமெண்டு சொல்லு நீங்களோ அதைச் செய்யிறம்" என்றார். பந்தை எனது பக்கம் எறிகிறார். இந்த விடயத்தில் நான் சொல்லப்போகும் பதில் எதுவாக இருந்தாலும் போராளிகள் மட்டத்தில் சுட்டிக்காட்டப்படும்.

"நான் முதலில போராளியாத்தான் ஆனேன். பிறகுதான் அப்பா ஆகினேன்", சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன். அதன்பின், போராளிகள் - குடும்ப உறுப்பினர் சந்திப்பு உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில்தான் அவளைச் சந்திக்க முடிந்தது. நடைபெற்ற கலை நிகழ்வொன்றிலும் அவள் பங்குபற்றினாள். பின்னர் தனது சகோதரியின் திருமண நிகழ்வுக்காக வந்திருந்தாள். அடுத்தடுத்த சந்திப்புகளின் பின், ஒருநாள் இவள் தனது முகாமுக்குப் புறப்பட்டாள். அப்போது ஒரு கடித உறையை என்னிடம் கையளித்தாள். "இதை தலைவர் மாமாவிட்டக் குடுங்கோ", என்றாள்.

தலைவருக்கென கடிதம் அனுப்பும் வழிமுறைகள் பற்றி இவளுக்குத் தெரியாததொன்றல்ல. என்னிடம் ஏன் தருகிறாள்? அதுவும் கடித உறை ஒட்டப்படவில்லை. அதாவது, தான் என்ன விடயத்தை எழுதியிருக்கிறேன் என்பதை நான் வாசிக்க வேண்டுமென விரும்புகிறாள் எனப் புரிந்து கொண்டேன். அவளை அனுப்பிய பின் நான் அந்தக் கடிதத்தை வாசித்தேன். தான் கரும்புலியாகப் போகப் போவதாகவும் அதற்கு அனுமதிக்குமாறும் வேண்டப்பட்டிருந்தது. இதனை வாசித்த பின் எனது எதிர்வினைகள் எப்படியிருக்கும் எனப் பார்க்க விரும்புகிறாள். அதாவது எனக்கு ஒரு சத்திய சோதனை வைக்கிறாள். ஓர் அப்பாவாக நான் நடந்து கொள்கிறேனா அல்லது போராளியாக முடிவெடுக்கிறேனா என சோதிக்கிறாள். நான் என்னிடம் ஒப்படைத்த கடிதத்தை உறையை ஒட்டியபின் அனுப்பி வைத்தேன். இயக்கத்தில் இணைய முயற்சித்த காலத்தில் எத்தனை சோதனைகளைத் தாண்டியிருக்கிறேன். இன்று நான் பெற்ற மகளே என்னை எடைபோடுகிறாள் என்று எண்ணினேன்.

கிட்டுவின் நினைவுநாளை முன்னிட்டு ஒரு கட்டுரை எழுதப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டு ஒருநாள் வந்தாள். அப்போது இடம் பெயர்ந்து தருமபுரத்தில் இயங்கிக் கொண்டிருந்தது ஈழநாதம். அவளுக்கு குறிப்புகள் கொடுக்க ஆயத்தமாகும்போது பெரும் சத்தத்துடன் எறிகணை ஈழநாதத்துக்கு சமீபமாக வெடித்தது. இவள் தனது துவிச்சக்கரவண்டியை முன்பக்கத்தில் விட்டிருந்தாள். இனி தாமதிக்க நேரமில்லை. "சைக்கிளை எடுத்துக் கொண்டு நெத்தலியாத்து பாலத்தின் முடிவுக்கு வா" என்று சொல்லிவிட்டு நான் பயன்படுத்தும் பின்பக்கப் பாதையில் உள்ள மோட்டார் சைக்கிளை எடுக்கப் போனேன். தெரு நிறைய மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் போய்க்கொண்டிருந்தனர். இவளை மட்டும் காணவில்லை. சுமார் ஒரு மணித்தியாலம் சென்ற பின்னரே இவள் வந்தாள்.

ஒரு கடைக்குள்தான் எறிகணை வீழ்ந்து வெடித்துள்ளது. அங்கு ஒரு ஐயா படுகாயமுற்றார். அவரை தூக்க முயற்சித்தால் முடியவில்லை. தெருவில் போனவர்களை அழைத்து ஈழநாதத்தின் வாகனம் ஒன்றில் ஏற்றி விசுவமடு மகா வித்தியாலயத்தில் இயங்கிய வைத்தியசாலைக்கு அனுப்பிய பின்னரே வந்தாள். அன்று இரவு 7 மணியளவில் நான் தங்கியிருந்த இடத்துக்கு வந்தாள். அழுது கொண்டிருந்த இவளை சமாதானப்படுத்தினேன். இவளது நண்பி யாராவது வீரச்சாவடைந்திருக்கலாம் என்று எண்ணினேன். ஒலிபெருக்கியில் சிறுபிள்ளை ஒன்றுக்கு இரத்தம் தேவை என அறிவித்திருக்கிறார்கள். தான் இரத்தம் கொடுக்கப் போகிறேன் என முகாமிலிருந்து புறப்பட்டு விசுவமடு சந்திக்கு சென்றிருக்கிறாள் இவள். இரத்த அழுத்தம் அதிகமாக இருந்ததால் இவளிடம் இரத்தம் எடுக்கமுடியவில்லை. எப்படியாவது இரத்தம் கொடுக்க வேண்டும். அந்தப் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என அழுதாள். இவளை அழைத்துக் கொண்டு போனேன். "கொஞ்சம் ஆறுதலாக பதற்றப்படாமல் இருங்கள்", என்று கூறினார்கள் மருத்துவத்துறை போராளிகள். அதன்படி, அமைதியாக இருந்தாள். அதன் பின் பிறசர் பார்த்தார்கள். திருப்தி என்றதும் இரத்தம் எடுத்தார்கள். அப்பா என்றாலும் இரவில் முகாமுக்கு மோட்டார் சைக்கிளில் கூட்டிக்கொண்டு போகக்கூடாது எனக் கருதிய நான் சந்தியில் நின்று வந்த இயக்க வாகனம் ஒன்றில் அவளைக் கூட்டிக்கொண்டு போய் முகாமில் விட்டேன். அடுத்தநாள் விசுவமடு மகா வித்தியாலத்துக்கு சென்று முதல்நாள் தான் காப்பாற்றி அனுப்பிய ஐயாவுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்ததாக அவள் சொன்னாள்.

தனது தம்பி சங்கர் எறிகணை தாக்குதலில் உயிரிழந்தபோது (வயது 16) வந்த இவள், "ஏனம்மா மார்க்கண்டேயரைப்போல ஒரு பிள்ளை வேணும் எண்டு கடவுளிடம் கேட்டிருக்கலாமே", என அழுதாள். அந்த வயதிலும் விரல் சூப்பும் பழக்கமுள்ள சங்கர் அந்த நிலையிலேயே உயிரிழந்திருந்தான். அவன் துடிக்கவில்லை எனப் புரிந்தது. துடித்திருந்தால் வாயிலிருந்து விரலை எடுத்திருப்பானே. அவனை இழந்து 19ஆம் நாள் (26. 04. 2009) இவளையும் இழந்தோம். விமானத் தாக்குதலில்

(18ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# அன்போடும் மன நிறைவோடும் இருப்பதே பெரும்பேறாய்...

பகிர்வு -57

**கணபதி சர்வானந்தா**

அன்புக்கு மறுபெயர் ஆண்டவன் என்பது அருள்வாக்கு. இதனையே திருமூலர் தமது திருமந்திரத்தில்

"அன்பும் சிவனும் இரண் டென்பரறிவிலார், அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே....." என்றார். அன்பும் தெய்வமும் இரண்டு என்று கூறுவது அறியாமை. அன்புதான் தெய்வம் என்பதனை ஒருவரும் அறிந்திலர். அவ்வாறு அன்பும் சிவமும் ஒன்று என்ற உண்மையை அறிந்தவர்கள் அன்பிலே தெய்வத்தைக் கண்டு அந்தப் பேரின்பத்திலே நிலைநிற்பர். இறைவனின் தோற்றங்களுக்குப் பல பெயர்கள் உண்டு. அது போன்றே அன்பும் பலவகைத்தோற்றங்களையும் பெயர்களையும் கொண்டுள்ளது. நாம் தாய் தந்தையரிடத்தில் செலுத்தும் அன்பு பாசம் என்றும், நாயகன் நாயகியிடம் கொண்டுள்ள அன்பு காதலென்றும், அடியார்கள் ஆண்டவனிடம் கொண்டுள்ள அன்பு பக்தி என்றும் ஆண்டவன் அடியார்களிடத்துக் காட்டும் அன்பு கருணை யென்றும் பலவாறாகச் சொல்லப்படுகிறது.

"அம்மையே அப்பா அருட்பெரும் ஜோதியே," என்று தாயாகவும், தந்தையாகவும் இறைவனை விளித்துப் பாடினர். அவரைக் குழந்தையாகப் பாவித்து, பிள்ளைத் தமிழ்பாடி மகிழ்ந்தனர். அவரை நாயகனாக உருவகப்படுத்திய அடியார்கள் தங்களை நாயகிகளாக நினைத்து அவனருள் வேண்டினர். அன்பு எந்த உள்ளத்தில் பூரணமாக நிறைந்துள்ளதோ அங்கு இறைவன் கோயில் கொண்டு வீற்றிருக்கிறான். அதனால் தான் திருமூலர், "உள்ளப் பெருங் கோயில்" என்றார். அன் பின் வலிமை அளவிடர்க்கரியது அதனையே "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்..." – என்றார் வள்ளுவர்."

எனவே அன்பு அத்தனை மகத்துவம் வாய்ந்தது. அதனை உறுதிப்படுத்துவதாக, தமிழ் நாட்டின் முதலமைச்சராக செல்வி. ஜெயலலிதா இருந்தபோது அவரால் நடத்தி வைக்கப்பட்ட திருமண வைபவத்தில் மணமக்களுக்கு அவர் சொன்ன பின்வரும் அறிவுரை அமைந்திருந்தது.

மணமக்களாகிய நீங்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தாமல், அன்பைச் செலுத்தி, தாய் தந்தையரை அரவணைத்து வாழ்ந்தால் "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்ற பாவேந்தரின் வாக்குக்கு இணங்க உங்கள் குடும்பம் சிறப்பாக அமையும். உங்கள் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும். அன்பும் ஆனந்தமும் எங்கிருக்கிறதோ அங்கு தான் அமைதியும், ஆனந்தமும் தவழும். அதனைச் சொல்வதாகப் பின்வரும் கதை...

ஒரு ஊரிலே ஒரு விவசாயி இருந்தான். அவன் எந்தவிதக் குறைகளும் இல்லாது எல்லா வசதிகளோடும் விசாலமான வீடொன்றில் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான். ஒரு நாள் இரவு அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தபோது அவன் கனவில் தோன்றிய கடவுள் "அன்பரே! நான் உன்னைவிட்டுப் போய் விடலாம் என்று தீர்மானித்து விட்டேன். எனவே போவதற்கு முன்னர் உனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக் கொள். தருகிறேன்." என்றார்.

அதிர்ச்சியடைந்த அந்த விவசாயி கடவுளைப் பார்த்து " கடவுளே இப்படித் திடீரெனச் சொல்லி விட்டீர்கள், என்ன கேட்பது என்று ஒன்றும் தெரியவில்லை." என்று பதிலளித்தான். அதற்குக் கடவுள் "சரி உனக்கு அவகாசம் தருகிறேன்.நாளை இரவு உன் கனவில் மறுபடியும் நான் வருவேன். அப்போது உனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக் கொள்." என்று சொல்லி மறைந்தார்.

மறு நாள் காலையில் எழுந்த விவசாயி தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்று கூட்டினான். தான் கண்ட கனவு பற்றி எடுத்துரைத்து அவர்களிடம் ஆலோசனை கேட்டான். அதற்கு குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகத் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

"இப்போது எங்களிடம் உள்ள சொத்து இருமடங்காக வேண்டும் என்று கேளுங்கள்." என அவர் மனைவி ஆலோசனை சொன்னாள். "உடுக்கத் துணிமணியும் உட்கார்ந்து இருந்து சாப்பிடக் கூடிய வசதிவாய்ப்புகளைத் தட்டுப்பாடில்லாது தந்துதவ வேண்டும் என்று மட்டும் கேளுங்கள். அது போதும்." என அவர் மகன் ஆலோசனை சொன்னான். "எப்போதும் எங்கள் குடும்பத்தைத் தரித்திரம் அணுகவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும் எனச் சுருக்கமாக ஒரு வரத்தைக் கேட்டுப் பெறுங்கள்." என அவர் மகள் ஆலோசனை வழங்கினாள். அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த அந்த விவசாயின் தாய் "மகனே! இந்தக் குடும்பத்திலுள்ள அனைவரும் அளவற்ற அன்போடும், நிறைந்த பாசத்தோடும் சண்டை சச்சரவுகள் இல்லாதவர்களாக மன நிறைவாடு வாழ வேண்டும்." என்றதை வரமாகக் கேட்டுப் பெற்றுக் கொள்.அதுவே போதும்." என்று அறிவுரை சொன்னாள். அந்த விவசாயிக்குத் தனது தாயார் சொன்ன அறிவுரையே சிறந்ததாகத் தெரிந்தது. அதனையே கடவுளிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.

அன்றிரவு கடவுள் அவர் கனவில் வந்த போது விசவாயி மன மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்டார். "அடியவனே உனது வேண்டுதல் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி தனது தாயார் சொன்னபடி "எனது குடும்பத்திலுள்ள அனைவரும் அளவற்ற அன்போடும், நிறைந்த பாசத்தோடும் சண்டை சச்சரவுகள் இல்லாதவர்களாக மன நிறைவோடு வாழ வேண்டும். அதனையே வரமாகத் தந்துதவ வேண்டும்." என்று கேட்டான்.

உடனே கடவுள் தனக்குள் யோசிக்கத் தொடங்கினார். அதனை கண்ட அந்த விவசாயிக்குப் பயம் வந்துவிட்டது. "இறையே! என்ன யோசிக்கிறீர்கள்? நான் என்ன தவறாக எதையும் கேட்டு விட்டேனா?" என மனம் பதைத்தார்.

"இல்லை அன்பரே! நான் தான் எனது முடிவை மாற்ற வேண்டியதாயிற்று. அன்பு, பாசம், சண்டை சச்சரவுகள் இல்லாத இடத்திலேயேதான் நான் குடியிருக்க ஆசைப்படுவேன். அப்படியாக உனது குடும்பம் இருக்குமானால் அதனை விட்டு நான் எப்படிப் போவது? எனவே இங்குதான் நிரந்தரமாக இருக்கு விரும்புகிறேன்." என பதிலளித்துவிட்டு அவர் மறைந்துவிட்டார்.

# இந்தவார ராசிபலன் 27.11.2022 - 03.12.2022

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சதுர்த்தி

நவம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 11

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செயல்கள் தாமதமாகும். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். அந்நியர் வழியே ஆதாயம் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். இக்காலத்தில் அடுத்தவரை நம்பி உங்கள் பணிகளை ஒப்படைக்காதீர்கள்.சந்தோஷமும் சங்கடமும் கலந்த வாரமாக இந்த வாரம் இருக்கும். எதிர்பார்த்த வெற்றியை அடைவீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

யோகமான நாளாகும். வீட்டில் விசேஷங்களுக்கு திட்டமிடுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். கவனமுடன் செயல்படுங்கள். வேகமுடன் செயல்பட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். அரசு வகையில் நன்மைகளை அடைவீர்கள். செயல்களில் நிதானம் தேவை. ஆதாயம் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உங்கள் நிலையில் உயர்வு ஏற்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செயல்களில் லாபகரமான நிலையைக் காண்பீர்கள். பிள்ளைகளுக்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பண வரவு உண்டாகும். எதிர்பாராத நெருக்கடிகளும் சங்கடமும் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்புகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். செயல்களில் கவனம் தேவை.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வரவு அதிகரிக்கும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். எண்ணம் ஈடேறும். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வேலை வாய்ப்பை எதிர்பார்த்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். அனைத்திலும் எச்சரிக்கை அவசியம். உங்கள் ஆரோக்கியம் சீராகும். பகைவர்களின் தொல்லை விலகும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

தொழில் முயற்சிகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். முயற்சிக்கேற்ப நன்மைகள் உண்டாகும் வாரம் இது. உத்தியோகத்தில் இருந்த நெருக்கடிகள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானமும் செல்வாக்கும் அதிகரிக்கும். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். கவனமுடன் செயல்படுவதால் நன்மைகள் அதிகரிக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்கள் செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளைக் காணும் வாரம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஒரு சிலர் புதிய வீட்டிற்கு குடியேறுவீர்கள். வீட்டில் திருமணப் பேச்சு எழும். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வீர்கள். தேவைக்கேற்ற அளவிற்கு வருமானம் வந்து சேரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிகளால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பார்ப்புகளில் பின்னடைவுகளை சந்திப்பீர்கள். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பிற்குரிய தகவல் வரும். நட்புகளிடம் எச்சரிக்கை அவசியம். எதிர்மறையான விஷயங்கள் நடந்தேறலாம். உங்களை சோதிக்கும் அளவில் சில சம்பவங்கள் நடக்கும். நிதானத்துடன் செயல்படுவது அவசியம்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் விருப்பம் நிறைவேறும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயல்களில் வேகமும் விவேகமும் இருக்கும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். எதிர்ப்புகள் விலகும். திட்டமிட்டிருந்த செயல்களை செய்து முடிப்பீர்கள். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். வீட்டில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

செலவுகளால் சங்கடம் தோன்றும். எண்ணங்கள் நிறைவேறும். எதிர்பாராத வரவுகள் உண்டாகும். முயற்சிகள் எளிதாக நிறைவேறும். உங்களின் நியாயமான செயல்கள் லாபமாகும். கவனம் தேவை. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தினர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் ஆதாயம் தரும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பாராத வரவு உண்டு. செலவுகளால் சங்கடங்கள் ஏற்படும்.நீங்கள் விரும்பியதை அடையும் வாரம் இது. தொழிலில் இருந்த தடைகள் விலகும். அதன்பின் திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். எதிர்பார்த்த வருவாயால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு செலவில் கவனம் தேவைப்படும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நினைத்ததை சாதித்திடக் கூடிய வாரம் இது. தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிக்கும். வேலை தேடியவர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். வர வேண்டிய பணம் வந்து சேரும். செலவுகள் அதிகரிக்கும். தைரியம் அதிகரிக்கும். முயற்சி வெற்றியாகும். நீண்டநாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். வாழ்க்கைக்குரிய வழியைக் கண்டுபிடித்து முன்னேறுவீர்கள்.குடுபத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உங்கள் எதிர்பார்ப்புகள் எளிதாக நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வியாபாரம், உத்தியோகத்தில் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். தன்னம்பிக்கையுடன் போராடி நினைத்ததை முடிப்பீர்கள். திறமை வெளிப்படும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றியாகும். ஆற்றல் வெளிப்படும். லாபம் அதிகரிக்கும். உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும்.

# ருவாண்டாவுக்கு அனுப்பப்படும் தமிழ் அகதிகள்!



சென்னை மடல்

-பகவான் சிங்-

சமீபத்தில், மன வேதனை தரும் கட்டுரை ஒன்றைப் படித்தேன். பிரபலமான இணைய இதழான 'த நியூ ஹியுமெனிடேரியன் ஆர்க்'இல் அந்தக் கட்டுரை வெளியாகியிருந்தது. பிரிட்டிஷ் இந்துமாகடல் பிராந்தியத்தில் உள்ள தொலைதூரத் தீவான டியாகோ கார்சியாவில், சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஐந்து படகுகளில், புகலிடம் தேடி வந்திறங்கிய 200 இலங்கை அகதிகளின் மோசமான வாழ்க்கைத் தரம் குறித்த கட்டுரை அது. இந்தச் சோகக் கதையின் பயங்கரமான பகுதி என்னவென்றால், இவர்களில் மூன்று பேரை மருத்துவ சிகிச்சைக்காக ஆபிரிக்காவில் உள்ள ருவாண்டாவிற்கு அனுப்பவிருப்பதாக வெளியான தகவல்தான். டியாகோ கார்சியா தீவிலிருந்து மொத்தமாக இலங்கை அகதிகள் அனைவரையும் ருவாண்டாவிற்கு அனுப்பும் பிரிட்டனின் திட்டத்திற்கான ஒரு முன் முயற்சியாகவே இந்த நடவடிக்கை இருக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

டியாகோ கார்சியாவில் பிரிட்டன் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரை 'த நியூ ஹியூமெனிடேரியன்' பேட்டி கண்டது. ஒருவேளை, எதிர்காலத்தில் அவர் கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், அவருக்கு எந்தச் சிக்கலும் வராமல் இருக்கும்பொருட்டு, அவரைக் 'கண்ணன்' என்ற கற்பனைப் பெயரில் குறிப்பிட்டிருந்தது அந்த இதழ். அவரின் பேட்டியில், "கட்டாயமாகக் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில், கடலில் அடைக்கலம் தேடுவேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன், தமிழகத்தில் இருந்த ஈழத் தமிழ் அகதிகளை, ஈழ 'முகவர்கள்', அதிக விலை பெற்றுத் தங்கள் படகுகளில் ஏற்றிச்சென்று, உறுதியளித்தபடி அவுஸ்திரேலியா செல்லும் முன்னரே படகு கவிழ்ந்து, அத்தனை மக்களையும் கடல் கொண்ட கதைகளை நான் எழுதியிருக்கிறேன். மீறி உயிர் பிழைத்து, இந்துமாகடல் பயணத்தை முடித்தாலும், கரைக்கு வெகு தொலைவிலேயே அவுஸ்திரேலியக் கடலோரக் காவல் படையாலும் கடற்படையாலும் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர்களின் புகலிடம் கோரும் மனுக்களைப் பரிசீலனை செய்யும் கொள்கைப்படி, பப்புவா நியூ கினியில் உள்ள கிறிஸ்மஸ் தீவு அல்லது நௌரு மற்றும் மனுஸ் தீவுக்கு அனுப்பி

வைக்கப்பட்டு, இறுதியில் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படுவார்கள், அதுவும் இப்போது, இலங்கையில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதாகவும், தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு இல்லை என்றும் கொழும்பு கூறிக்கொள்ளும் காரணத்தினால், கண்ணன் மற்றும் பிற புகலிடம் கோருவோர் விஷயத்திற்கு வருவோம். புலம்பெயர்ந்து வந்து புகலிடம் கோருவோரின் வருகை அதிகரித்து வருவதால் இங்கிலாந்து அரசின் மீதான அழுத்தமும் கூடுகிறது என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆங்கிலக் கால்வாயில் கூட்டு ரோந்தை அதிகரிப்பது குறித்து, நவம்பர் 14 அன்று உள்துறை அமைச்சர் சுயெலா ப்ரேவர்மன் பிரான்ஸ்/டன் ஓர் ஒப்பந்தத்தில்

## அமைதியான மக்கள் புரட்சியின் தேவை

கையெழுத்திட்டுள்ளார். இம்மாதத் தொடக்கத்தில், இங்கிலாந்தின் தென் கிழக்குக் கடலோரப்பகுதியில் உள்ள ஒரு குடிபெயர்வு மையம், தீவிர வலதுசாரி ஆதரவாளரால் குண்டு வைத்துத் தாக்கப்பட்ட மறுநாள், புகலிடம் கோரிப் படகுகளில் வருவோரது வருகை ஓர் 'ஆக்கிரமிப்பு' என்று சுயலா குறிப்பிட்டுள்ளார். இப்படிப் புகலிடம்கோரி வருவோரை ருவாண்டாவிற்கு அனுப்பிவைக்கும் தனது கனவை நனவாக்க உறுதியுடன் இருப்பதாகவும் அவர் பிரகடனப்படுத்தினார்.

1994 ருவாண்டா இன அழிப்புச் சம்பவத்தின் கொடூரமான நினைவுகள் என் மனதில் நிழலாடின. 'ருவாண்டா இனவழிப்பு: 100 நாள் கொடுமை' என்ற தலைப்பில் ஏப்ரல் 2019இல் பி பி சி மிக அருமையான ஒரு செய்தித் தொகுப்பை வெளியிட்டிருந்தது. அதை நான் முதலில் படித்தபோது, அந்த மத்திய ஆபிரிக்க நாட்டில் நடந்த கொடுமைகள், இந்துமாகடலின் ஓர் அழகான தீவான இலங்கையில் நடந்த கொடுமைகளை ஒத்திருப்பதைக் கண்டு வியந்தேன். 8 முதல் 10 லட்சம் வரையிலான சிறுபான்மை இனமான துத்ஸி இனத்தவரை, பெரும்பான்மை ஹூது சமூகத் தீவிரவாதிகள் கொன்று குவித்தனர். அன்றைய காலத்தில், அடையாள அட்டையில் இனப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. (தற்போது, அதிபர் போல் ககாமே இனப் பாகுபாட்டை ஊக்குவிக்காததால், இது நடைமுறையில் இல்லை). ஆட்சியில் இருந்த ஹூது அரசு அளித்த தகவலின் அடிப்படையில் துத்ஸி இனத்தவர் வசிப்பிடத்தைத் தேடித்தேடி அவர்களைக் கொன்று குவித்ததுடன், பயணம் செய்வோரைத் தடுத்து நிறுத்தி, அவர்களின் அடையாள அட்டைகளைச் சரிபார்த்துக் கத்தியால் வெட்டிக் கொன்றனர்.

1983 ஜூலையில் கொழும்பில், வாக்காளர் அட்டையைக்கொண்டு தமிழர்களை அடையாளம் கண்டு, சிறில் மத்தியூ போன்ற சிங்கள அரசியல் ரௌடிகளின் தலைமையில் நடந்த தமிழர்களுக்கு எதிரான கறுப்பு ஜூலைப் படுகொலைச் சம்பவம்போலவே இருந்தது அது.

கடந்த காலத்தில் நடந்த இந்த இரண்டு மாபெரும் இனவழிப்புச் சம்பவங்களின் ஒற்றுமைகள், அவை நடத்தப்பட்ட விதத்துடன் முடிவுக்கு வருகிறது. 1994க்குப் பிறகு, ருவாண்டாவில் நிலைமை மாறத் தொடங்கியது. துத்ஸி இனத்தவர் ஆட்சியைக் கைப்பற்றிய சிறிதுகாலம் வரை, ஹூது தீவிரவாதிகளைத் தேடித் தேடிக் கொன்றனர். ஹூது சமூகத்தினர் உயிர் பிழைத்து அண்டை நாடுகளில் சரண் புகுந்தனர். மறுவாழ்வு பெற்றதையடுத்து இந்தப் பிரச்னை சுமுக நிலைக்குத் திரும்பியது. ஆனால், இலங்கையில், மஹிந்த ராஜபக்ஷ, போரில் புலிகளை வென்ற பிறகும், காலிமுக வெற்றிப் பேரணியிலும் தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்றும், அனைத்துக் குடிமக்




களுக்கும் சமமான வளர்ச்சி வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் உறுதியளித்த பிறகும்கூட, சிறுபான்மைத் தமிழர்களின் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

தனக்கு எதிரான கருத்துகளுக்கோ விமர்சனங்களுக்கோ சகிப்புத்தன்மை இல்லாதவர் என்றும், தன்னை எதிர்ப்பவரைக் களையெடுத்துவிடுபவர் என்றும் ககாமேமீது குற்றம் சாட்டப்பட்டாலும், ருவாண்டாவை ஒரு வேகமாக வளரும் பொருளாதார நாடாக மாற்றுவதில் இவரது பங்களிப்பு பெரிதும் பாராட்டப்படுகிறது. "முற்றிலும் சீரழிந்துபோன ஒரு சிறிய நாடான ருவாண்டாவைத் தன் கொள்கைகளால் வேகமான பொருளாதார முன்னேற்றம் பெறச் செய்து, அந்நாட்டை ஒரு தொழில்நுட்ப மையமாகவும் மாற்றிய ககாமே, ட்விட்டரிலும் சுறுசுறுப்பாக இயங்குகிறார்" என்கிறது பி பி சி. ஏப்ரல் 2000இல் நாட்டின் அதிபரான இந்த முன்னாள் இராணுவ அதிகாரிக்கு இப்போது வயது 65. ஏழாண்டுகளுக்கு ஒரு முறை ருவாண்டாவில் தேர்தல் நடைபெறுகிறது. 2021இல் தனது நான்காவது ஆட்சிக் காலத்தில் காலடி எடுத்து வைத்துள்ளார் இவர். 2028 தேர்தலில், 71 வயதாகும் போதுகூட, இவருக்குப் போட்டியாக ஒருவர் உருவெடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

ருவாண்டா மற்றும் ககாமே குறித்து நான் இவ்வளவு விரிவாக விளக்க என்ன காரணம்? ருவாண்டாவிற்கும் இலங்கைக்கும் பொதுவாக உள்ள இரத்தம் தோய்ந்த கடந்த காலமும் அந்தச் சாம்பலிலிருந்து உருவான நாட்டை இந்த இரு நாட்டுத் தலைவர்களும் கையாண்ட விதத்தில் உள்ள வேறுபாடும்தான் முதல் காரணம். இரண்டாவது காரணம், டியாகோ கார்சியாவிலிருந்து பிரிட்டிஷ் அரசால் ருவாண்டாவிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் தலையெழுத்து குறித்த என் கவலை. ருவாண்டாவிலிருந்து அவர்கள் இலங்கைக்கோ அல்லது அவர்களை ஏற்கத் தயாராக இருக்கும் வேறு ஒரு நாட்டுக்கோ அனுப்பப்படலாம்.

1994 இனவழிப்புக்குக் காரணமாக இருந்த ஹூது தீவிரவாதிகளை வென்ற 'ருவாண்டன் பேட்ரியாட் புறன்ற்' தலைவர் ககாமே, சிதறிக்கிடந்த நாட்டின் அதிபராகி, அதன் மறுசீரமைப்புக்கும் மறு கட்டமைப்புக்கும் அயராது உழைத்து வென்றார். ஆனால், இங்கு ராஜபக்ஷ குடும்பத்தினரின் செயல்பாடு முற்றிலும் இதற்கு மாறாக இருந்தது. இங்கு நடந்த விஷயங்கள்

## தமிழர்கள் தஞ்சம்தேடி ஏன் அலைகிறார்கள்?

குறித்து என்னை விட அதிகம் உணர்ந்த என் 'ஈழநாடு' வாசகர்களுக்கு நான் அவற்றை மீண்டும் நினைவுபடுத்தவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன் ஈழத்தமிழர்கள் தங்கள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் இப்படித் துன்புறவேண்டிய காரணம் என்ன? தரமான வாழ்வு வேண்டிக் படகுகளில் கடலோடி அலையும் சிலர், இலங்கையில் தங்களுக்குக் கொடுமை செய்யப்படுகிறது என்றஞ்சியா இந்த அபாயம்மிக்க கடல் பயணங்களை மேற்கொள்கின்றனர்? கல்வி, வேலைவாய்ப்பு, சுய தொழில் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தை எட்டிவிட்ட இந்த வெளிநாடு வாழ் ஈழத் தமிழர்களில் எத்தனை பேர் உண்மையில் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தலைநிமிர்ந்து நிற்கின்றனர்? ஈழ நாட்டின் வயல்களில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் சம்பாவின் அடுத்த அறுவடைக்காகக் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கும் ஒரு விவசாயியைவிட இவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா?

இன்னொரு செய்தியும் பார்த்தேன். இந்தியாவின் உளவு அமைப்பான 'றோ'வின் தலைவர், இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கவுடன் இரகசியச் சந்திப்பு நிகழ்த்தினார் என்பதுதான் அது. இந்தச் செய்தி ஈழத் தமிழர்களை பெரிதும் ஈர்ப்பது ஏன்? ஈழத் தமிழர்கள் ஒற்றுமையுடனும் ஒழுக்கத்துடனும் அனைத்துவகை வளர்ச்சியையும் தமது தேசத்துக்கு அளிக்கக்கூடிய நாட்டுப்பற்று மிக்க தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றிபெற்றிருந்தால், இந்தியா குறித்தும் சீனா குறித்தும் கவலைப்படத் தேவையேயில்லையே? ஒன்றுபட்ட தமிழர் தலைமை நேர்மையாகவும் வலிமையாகவும் இருந்தால், கொழும்புக்கு வரும் இந்தியப் பிரதிநிதி மட்டுமல்லாமல், எந்த நாட்டுப் பிரதிநிதியும் இரகசியமாக, சிங்களத் தலைமையை மட்டும் சந்தித்து, தமிழர் தலைமையைப் புறக்கணிக்கத் துணியுமா? அல்லது, ஈழத் தமிழர்கள் தாம் அபாயம் நிறைந்த படகுப் பயணங்களை நம்பி, தங்களை வெறுக்கும் இன்னொரு நாட்டுக்குத் தஞ்சம் தேடித் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முயற்சிப்பார்களா?

நான் மேற்குறிப்பிட்ட ஆரோக்கியமான கட்டமைப்பு உருவாவதை இன்றைய அரசியல் தலைவர்கள் பலர் அனுமதிக்க மாட்டார்கள். காரணம், விழிப்புணர்வு மிக்க, ஒற்றுமையான மக்கள், தங்கள் தலைவர்கள் சுயநலமாகத் தவறான பாதையில் சென்று, பொது நலனையும் நாட்டு நலனையும் பலிகொடுத்துத் தங்கள் சுயத்தை மட்டும் மேம்படுத்திக்கொள்வதை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். எனவே, இந்தத் தலைவர்கள் உங்களை வழிநடத்தக் காத்திருக்க வேண்டாம். அவர்கள் உங்களைப் படுகுழியை நோக்கித்தான் இட்டுச் செல்வார்கள். மாணவர்கள், இல்லத்தரசிகள், முதியோர், தொழில்வல்லுநர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள்,

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் என்று உங்கள் சமூக அமைப்புகளைப் பலப்படுத்தி, நல்லாட்சியையும், ஆரோக்கியமான ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தும் மக்கள் கூட்டணியை உருவாக்குங்கள். இது கடினமான சவால்தான். காலம் பிடிக்கும்தான். ஆனால், அசாத்தியமானதன்று. நிச்சயம் அசாத்தியமானதன்று. மனிதகுல வரலாற்றில் இத்தகைய அமைதியான மக்கள் புரட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

●



# ஜனாதிபதி ரணிலும் எதிர்கால "அறகலயவும்"



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்த மே மாத முற்பகுதியில் கொழும்பு காலிமுகத்திடலில் "அறகலய" போராட்டக்களத்துக்கு அண்மையாக பெருமளவு பொலிஸ், இராணுவ வாகனங்களைக் கொண்டுவந்து நிறுத்தி அச்சுறுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் இறங்கியபோது வெறுமனே ஒரு எம்.பி.யாக இருந்த ரணில் விக்கிரமசிங்க அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி "கோட்டா கோ கம" வை அரசாங்கம் குழப்புவதற்கு முயற்சிக்குமானால் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகப்போவதாகவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதை நிறுத்தப்போவதாகவும் பாராளுமன்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் விடுத்த எச்சரிக்கை இப்போது எத்தனை பேருக்கு நினைவிருக்கிறதோ தெரியவில்லை.

அதே மாத நடுப்பகுதியில் பிரதமராக பதவியேற்பதற்கு முன்னதாக விக்கிரமசிங்க வேறு என்ன நிபந்தனைகளை கோட்டாபயவிடம் முன்வைத்தாரோ தெரியாது, ஆனால் முன்வைத்த ஒரு நிபந்தனையை நாடும் உலகமும் அறியும். அதாவது அறகலய போராட்டக்காரர்கள் மீது கைவைக்கக்கூடாது. அந்த போராட்டம் தொடர அனுமதிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. அதை ஏற்றுக்கொண்டு, தன்னை வீட்டுக்குப் போகுமாறு கேட்ட அந்த போராட்டத்தை குழப்புவதற்கு கோட்டாபயவும் எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை.

ஆனால், அன்று போராட்டக்காரர்களுக்கு எதிராக எந்த அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது என்று விக்கிரமசிங்க கேட்டாரோ அதே அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்தி எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய "அறகலய" போராட்டத்தை ஒடுக்கப்போவதாக இன்று அவர் கூறுரைப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

பாராளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை 2023 வரவு - செலவுத்திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதியொதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விக்கிரமசிங்க, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு அரசாங்க எதிர்ப்பு போராட்டத்தையும் ஒடுக்குவதற்கு அவசரகாலச்சட்டத்தை பிரகடனம் செய்து இராணுவத்தைப் பயன்படுத்தப்போவதாக கூறினார்.

"அரசாங்கத்தைக் கவிழ்க்க இன்னொரு அறகலய போராட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டமொன்று இருக்கிறது. அதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. மீண்டும் ஒரு அறகலய முன்னெடுக்கப்பட்டால் அவசரகாலச் சட்டத்தையும் இராணுவத்தையும் பயன்படுத்துவேன். அதற்காக என்னை அவர்கள் ஹிட்லர் என்று அழைக்கக் கூடும்.



"மக்களும் அரசியல் கட்சிகளும் போராட்டங்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், பொலிசாரிடம் முதலில் அனுமதியைப் பெறவேண்டும். பொலிஸ் அனுமதியில்லாத போராட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும்.

"பல மதத்தலைவர்கள் போராட்டங்களை வெளிப்படையாக கண்டனம் செய்தனர். குறிப்பிட்ட சில குழுக்களினால் அந்த மதத்தலைவர்கள் அச்சுறுத்தப்படுவதாக செய்திகள் வருகின்றன. அறகலய குறித்து ஆராய ஆணைக்குழுவொன்றை நான் நிமிப்பேன். ஆர்ப்பாட்டங்களையும் வன்முறைகளையும் ஊடகங்கள் தூண்டிவிடுகின்றன. எந்த ஊடக நிறுவனங்கள் இவ்வாறு செய்கின்றன என்பதை நாம் கண்டறிய வேண்டியிருக்கிறது" என்று ஜனாதிபதி தனதுரையில் கூறினார்.

பிரதமராக விக்கிரமசிங்க அறகலயவை நோக்கிய முறைக்கும் ஜனாதிபதியாக அவர் அதை நோக்குவதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எவராலும் புரிந்துகொள்ளமுடியும். அறகலயவின் காரணமாகவே தன்னிடமிருந்து இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தனது கைகளில் சிக்கியது என்பதை அவர் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கமுடியாது. ராஜபக்சாக்களை அதிகாரத்தில் இருந்து விரட்டிவிட்டு ஒரு விக்கிரமசிங்கவை அரியாசனத்தில் அமர்த்துவதற்காக மக்கள் போராட்டத்தை நடத்தவில்லை என்பதையும் அவர் அறிவார்.



ஆனால், ஜனாதிபதியாக பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஜூலை 20 தொடக்கம் அறகலய போராட்டக்காரர்களுக்கு எதிராக அவர் தொடங்கிய வேட்டை ஓய்வின்றி தொடருகிறது. மக்களின் அமைதிவழி போராட்டத்திற்குள் " ஊடுருவிய பாசிசவாதிகள்" சட்டம், ஒழுங்கைச் சீர்குலைத்து அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் செயற்பட ஆரம்பித்ததனாலேயே படைபலத்தை பயன்படுத்த வேண்டியேற்பட்டது என்பதே அவர் கற்பிக்கும் நியாயமாகும். கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக சர்வதேச சமூகத்துக்கு பல வருடங்களாக உறுதியளித்த விக்கிரமசிங்க அமைதிவழி போராட்டக்காரர்களுக்கு எதிராக -- எந்தவிதமான பயங்கரவாதச் செயலிலும் ஈடுபடாதவர்களுக்கு எதிராக --அதே சட்டத்தை இப்போது பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற வைத்த மக்கள் கிளர்ச்சி எந்தவொரு அரசியல் கட்சியினாலும் ஏற்பாடு செய்யப்பட்டதல்ல. இலங்கை அதன் வரலாற்றில் இதுகாலவரையில் காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவான இடர்பாடுகளுக்கு நாடுபூராவும் மக்கள் காட்டிய தன்னெழுச்சியான பிரதிபலிப்பே கிளர்ச்சியின் முதல் வெற்றியின் மூலாதாரமாகும். போராட்டத்தில் முன்னரங்கத்தில் நின்றவர்களுக்கு எதிரான பொலிசாரின் வேட்டை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மையே. அதனால் நிலவுகிற "அமைதியை" தனது அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றியாக ஜனாதிபதி நம்பினால் அவர் நாட்டு மக்களின் உணர்வுகளை சரியாக புரிந்துகொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும்.

அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை ஒரு கட்டத்தில் எடுத்த "அறகலய" மக்கள் போராட்டம் உண்மையில் அரசியல் அதிகார வர்க்கத்தின் அத்திபாரத்தை ஆட்டம் காண வைத்தது. அதே நிலைவரத்தை அந்த வர்க்கம் தொடர்ந்து அனுமதிக் காது. எவ்வாறெனினும் மீண்டும் மக் கள் கிளர்ச்சி உருவாகாமல் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அது மேற்கொள்ளும் என்பது தெரிந்ததே. அந்த வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதியாக ஜனாதிபதி விக்கிரமசிங்க இன்று மக்கள் போராட்டங்களுக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்கிறார்.

மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைத்து கிளர்ச்சிக்கான சூழ்நிலைகளை இல்லாமல் செய்வதென்பது அதிகார வர்க்கத்தினால் சாதிக்கமுடியாத ஒன்று. பதிலாக அடக்குமுறையின் ஊடாகவே கிளர்ச்சி மூளாதிருப்பதை உறுதிசெய்வதில் அவர்கள் முழுமூச்சாக செயற்படுவார்கள். அரச இயந்திரம் அந்த நோக்கத்துக்காக முழுவீச்சில் பயன்படுத்தப்படும். இதுவே இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

வரும் நாட்களில் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால்தான் அவர் மக்கள் மீண்டும் வீதிகளில் இறங்குவதை தடுப்பதற்கு முன்கூட்டியே கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து பயமுறுத்துகிறார். கடந்தவாரம் பாராளுமன்றத்தில் அவர் "மீண்டும் ஒரு அறகலயவுக்கு" எதிராக விடுத்த எச்சரிக்கை அத்தகைய ஒன்றே.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணரவேண்டிய நியாயபூர்வமான கடப்பாட்டின் நிமித்தம் மக்கள் போராட்டத்துக்கு ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவத்தை ஜனாதிபதி போராட்டங்களையும் வன்முறைகளையும் அவை தூண்டியதாக வியாக்கியானம் செய்கிறார். வன்முறையை ஊக்கப்படுத்திய ஊடக நிறுவனங்களைக் கண்டறியவேண்டியிருப்பதாகவும் அதற்காக அறகலய குறித்து ஆராய ஆணைக்குழுவொன்றை நியமிக்கப்போவதாகவும் அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

இது உண்மையில் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அப்பட்டமான அச்சுறுத்தலாகும். மக்களின் பிரச்சினைகளை ஊடகங்கள் வெளிப்படுத்துவதை அச்சுறுத்தித் தடுக்க அவர் முற்படுகிறார்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



ஓர் அஞ்சலிக் குறிப்பு:

# காண்டீபன் அமிர்தலிங்கம்!

- கனடா மூர்த்தி



**காண்டீபன்.** மறைந்த தமிழர் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் மூத்த மகன். மறைந்துவிட்டார். நவம்பர் 27 ஞாயிறு (இன்று) அந்த “உதய சூரியன்” எரிகிறது. தகனக்கிரியைகள் லண்டனில்.

காண்டீபன்: ஈழத்தமிழ் வரலாறு அவருக்கான இடத்தை தர முயன்றும் - அவர் அதை ஏற்கும் நிலையிலிருந்தும் - ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் ஈழத்தமிழ் சமூகப்போக்கு வைத்துவிட்டது. “தீவிர அரசியலில் ஈடுபட்ட அவரை ஒதுக்கிய காரணிகள் எவை?” என்பதை மனச்சாட்சியோடு யோசித்துப் பாருங்கள். நமது ஈழத்தமிழ் சமூகத்தின் இரட்டைத் தன்மையும் அதில் தெரியும். ‘ராஜராஜ சோழனைக்’ காட்டி ‘ராஜேந்திர சோழனுக்கு’ போராடும் உரிமை தர மறுக்கப்பட்ட சோகத்திற்கு காண்டீபன் உதாரணம்.

70களில் தமிழ் ஈழம் நோக்கிய பயணத்தின் ஆரம்பக் கட்டம் அது. அவரை நாம் ராஜூ அண்ணா என்றுதான் அழைப்போம். தம்பி ரவியுடன் (பகீரதன் அமிர்தலிங்கம்) கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ள வருவார். வசீகரச் சிரிப்பு முகத்தில் எப்போதும் இருக்கும். அதே சமயம் “தந்தை”யின் அரசியலை வேகப்படுத்த வேண்டும் என்ற துடிப்பும் எப்போதும் இருக்கும். “காண்டீபம் எழுக” என தனி ஈழம் காணும் ஆயுதப் போருக்கான ஆரம்பநிலைத் தயாரிப்பு வேலைகளை ஒருசில இளைஞர்கள் முயன்று கொண்டிருக்க, அவர்களுக்கெல்லாம் உதய சூரியனாக இந்த காண்டீபன் தெரிந்தார். அரசியலில் மிக வேகத்துடன் இயங்கும் இளைஞனாக “இளம் கன்று பயமறியாது” என்ற வகையில் அவரது நடவடிக்கைகள் இருக்கும்.

சிறிமாவோ அரசு சிங்கள பௌத்த இனவாதத்தை ஈழத்தமிழர்மேல் வைக்கிறது. தமிழர் “கூட்டணி”யாக எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாயம் வருகிறது... சட்டங்களுக்கு உட்பட்ட விதத்தில் சட்ட மறுப்புக்களும் செய்து நமது போராட்டத்தை உலகிற்கு புரிய வைக்க வேண்டும். “காந்தி வழிதான் போராட்ட நெறி” என்று தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிப்படையாக சொன்னாலும் சுபாஸ் சந்திரபோஸ்கள் உருவாக வழி விடுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். மாணவர்கள் மெதுவாக அரங்கிற்கு வருகிறார்கள். காண்டீபனும்தான்..

1972 - இலங்கை பௌத்த சிங்கள சிறிலங்காக் குடியரசாக மாற்றப்படுகிறது. புதிய அரசியலமைப்பிற்கு எதிரான தமிழர் போராட்டங்கள் வீறு கொள்கின்றன. விடுதலைக் கூட்டணியும், அதன் கீழ் இளைஞர் பேரவையும் இணைந்து எதிர்ப்பைத் தொடர்கின்றன. மல்லாகத்தில் தமிழீழத்தின் மலர்ச்சியை சொல்லும் வகையில் உதயசூரியன் கொடி ஏற்றப்படும் நிகழ்வு நடக்கவிருக்கிறது. அருகிலிருந்த மல்லாகம் நீதிமன்றத்தில் பறந்து கொண்டிருந்த சிங்கக் கொடியை பறித்தெடுத்து வருகிறார் காண்டீபன். உதயசூரியன் கொடி மேலே ஏறும்போது அடையாளமாக கீழே சிங்கக் கொடியை போட்டு எரிக்கிறார். பரபரப்பு தொற்றிக் கொள்கிறது. செய்தி பரவ, கொழும்பு ஆட்சியாளர்கள் கொதித்தெழுகிறார்கள். அதே காலப்பகுதியில் கொழும்பிலுள்ள ஒரு வாழைப்பழக்கடைக்கு சென்ற பதினாறு வயதுப் பொடியன் தனக்குத் தெரிந்தவர்கள் மூலம் ஒரு கைத் துப்பாக்கியை வாங்கியிருப்பதும் அமிர்தலிங்கத்திற்கு கடைக்காரர்கள் மூலமே தெரிய வருகிறது. அதுவும் காண்டீபன் என்பது ரகசியமல்ல.

பதின்ம வயதுக் காண்டீபனின் நடவடிக்கைகள் அமிருக்கு சிக்கலான நிலையை வரவைத்திருந்தது. “மகனை வைத்து மாணவர்களை திசைதிருப்பி தீவிர அரசியலுக்குள் இழுக்கிறார் அமிர்தலிங்கம்” என்ற சிங்கள விமர்சனங்கள் ஒருபுறம்.. “வாரிசு அரசியலை அமிர்தலிங்கம் செய்யப் பார்க்கிறார்” என்ற தமிழ் விமர்சனங்கள் மறுபுறம். அமிர்தலிங்கத்தின் மகனுக்கு பொறி வைத்து விட்டு காத்திருக்கும் சிஐடிக்களும், பொலிஸ்காரர்களும் இன்னொரு புறம்.... பஸ்தியாம்பிள்ளை பேரம்பலம் போன்றவர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

எந்தத் தமிழ் இளைஞன் சிறிலங்கா அரசால் கைது செய்யப்பட்டாலும் ஒரு வழக்கறிஞராக அமிர்தலிங்கம் வழக்காடச் சென்றுவிடுவார். ஆனால் தனது மகன் கைது செய்யப்பட்டால்???? ஒரு தலைவனாக செயல்பட வேண்டுமா ஒரு தந்தையாக செயல்பட வேண்டுமா? பொறுப்பான அரசியல் கட்சியின் தலைவனுக்கு அது அழகா..? அமிர்தலிங்கத்திற்கு ஏற்பட்ட சிக்கல் புரிந்து கொள்ளக் கூடியதே.

தமிழ்ஈழம் கருக்கட்ட ஆரம்பித்த அந்தக் காலகட்டத்தில் ஆரோக்கியமான வாதங்கள் மட்டுமல்ல, “இளம் பிள்ளை” வாதங்களும் தாராளமாகவே இருந்தன. காண்டீபனோடு நட்பாக இருப்பதாக காட்டும் ‘பொடியங்கள்’ சிலரே மறுபுறத்தில் காண்டீபன்மீது காழ்ப்புடன் இயங்கும் யதார்த்தம் யாழ்ப்பாணசமூகத்தின் இன்னொரு முகத்தைக் காட்டி நின்றது. அந்தக் கால கட்டத்தில்தான் அமிரை விமர்சிக்க காண்டீபனை காட்டிப் பேசும் “நச்சு அரசியல்தனம்” நம்மவரிடையே வெளி வர ஆரம்பித்தது என்பதையும் இந்த இடத் தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதெல்லாம் வளர்ந்தால் வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாக மாறிவிடும் என்பதை அமிர் மட்டுமல்ல தமிழரசுக்கட்சியின் தலைவர்களாக இருந்த வேறு பலரும் புரிந்து கொண்டிருந்தார்கள். பாராளுமன்ற அரசியல் நடந்த காலம் அது. சட்டங்களுக்கு உட்பட்டே சட்ட மறுப்புக்களையும் நடத்த வேண்டிய சிக்கல் நிலையும் இருந்த காலம். இதற்குள் “காண்டீபன்” என்பது வேறு பேசுபொருளாகிறது. பாராளுமன்ற அரசியலில் “நலன்களின் முரண்” என்பது அனைவராலும் கவனிக்கப்படுமல்லவா. விளைவு?

தீவிர அரசியலில் ஈடுபடுவதற்கான அனுமதி ‘அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபனுக்கு மட்டும்’ கூட்டணிச் செயலாளர் நாயகத்தால் மறுக்கப்படுகிறது. காரணம் : “காண்டீபன் என்பவன் அமிர்தலிங்கத்தின் மகன்.. ” அப்போது காண்டீபனுக்கு வயது 16 . “கொஞ்சக் காலம் பொறுத்திரு.” “முடியாது.. எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருப்பது?” “சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பார் நம் முன்னோர்.” “அப்போ என்ன செய்வது?” “ தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.”

பதின்ம வயதினராக இருந்தாலும் பலரது அரசியல் செயற்பாடுகளின் தொடக்க காலம் அது. தனக்கிருந்த கையறு நிலைமையைப் புரிந்திருந்தாலும் காண்டீபனால் போராட்ட வேட்கையை அடக்க முடியவில்லை. அவர் கல்வி கற்ற யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அவரது அரசியல் சகாக்கள் தேடி வருவார்கள். இவரும் அவர்களோடு கிளம்பிச் சென்றுவிடுவார். “சிறைகளில் அடைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்யும்படி கடையடைப்பு” “பாடசாலை பகிஷ்கரிப்புக்கான பிரச்சாரங்கள்” என பலவற்றையும் செய்வார்கள். விடுதலை உணர்வு பரப்பப்பட்டது. கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்குமன்றோ.

இதற்கிடையே, விடுதலைக் கனலை அமிர்தலிங்கம் மூட்டிவருதால் சிறிலங்கா அரசும் பௌத்த தேசியவாதிகளும் பொறுமையை இழந்து கொண்டிருந்தனர்.



“அமிருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்.” காண்டீபன் ஒருவரே அவர்களுக்குத் தெரிந்த இலக்கு. அமிர் வீட்டிற்குள் புகுந்து அடாவடி செய்து காண்டீபனைக் கைது செய்வது முடியாத காரியம். காரணம்? அரசியல்வாதி அமிர்தலிங்கம் ஒரு பெரும் வழக்கறிஞரும்கூட.

“எப்படியும் காண்டீபனை கைது செய்க” என்ற அரசியல் நெருக்குவாரம் அதிகரிக்க அதிகரிக்க அரச அதிகாரிகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர். அமிர்தலிங்கமும் அவரது சக தலைவர்களும் இவற்றையெல்லாம் நன்கு புரிந்து கொண்டுதான் தமது போராட்டக் களங்களை வகுத்தார்கள். தீவிரப்படுத்தினார்கள். நடப்பது நடக்கும். அதை யாரும் தடுத்துவிட முடியாது. ஆனால் நடப்பது என்னவென்று நாம் அறிந்திருக்க வேண்டும்.

1973 - காண்டீபன் கைதுக்கான நாள் ஓரளவிற்கு தீர்மானமாகியிருக்கும் செய்தி நம்பகமான உள்வீட்டுப் பிள்ளைகள் சிலர் மூலம் அமிர்தலிங்கத்திற்கும் தெரியவருகிறது. அந்த வாரத்தில் பொலீஸாரால் காண்டீபன் கைதாகப்படக் கூடும் என்ற ரகசியச் செய்தி கிடைத்ததும் அவசர அவரசமாக பலாலி விமான நிலையத்தூடாக விமான மூலம் திருச்சிக்கு காண்டீபன் அனுப்பி வைக்கப்படுகிறார். அங்கு ஈழ ஆதரவாளரான டொக்டர் ஜனார்த்தனனின் உதவி கிட்டுகிறது. அதன் பின்னர் காண்டீபன் பச்சையப்பா கல்லூரியில் சேர்த்து விடப்படுகிறார். பலரும் எழுதுவதுபோல “கல்வி கற்பதற்காக காண்டீபனை அமிர் சென்னைக்கு அனுப்பினார்” என்று சொல்லப்படுவது தவறு.

திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்தாலும் சூறாவளியை போத்தலில் அடைப்பீர்களா? இந்தியாவின் சட்டங்களை மீறாமல் தாண்டிக்கொண்டு, சிறிலங்கா உதவித்தூதரகத்திற்கு குண்டு வைத்தும்- மகாபோதி பௌத்த வளாகதிற்கு குண்டு வைத்ததும்- அங்கிருந்து கொண்டும் “சிறிலங்கா”விற்கு தலையிடி கொடுக்க ஆரம்பிக்கிறார் காண்டீபன்.

1975 முற்பகுதி. எங்கள் வீட்டில் எனது அறையில் படுத்திருக்கிறேன். இரவு எட்டரை ஒன்பது மணியிருக்கும் எனது அறைக்கு வலப்புறமாக இருந்த “செத்தை“ப்பக்கமாக இருந்து “ஸ்ஷ்.. ஸ்ஷ்.. ஸ்ஷ்.. ஸ்ஷ்...” என்று சத்தம் கேட்கிறது! அது நானும் எனது மாமாவும் வீட்டுக்குத் தெரியாமல் ரகசியமாக செக்ன்ட் ஷோ பார்க்க செல்வதற்கு என்னை வெளியே வரச் சொல்லும் சமிக்ஞை. கதவைத் திறக்காமல் ஜன்னல் ஊடாக வெளியே வந்து “செத்தை”யை தள்ளிக் கொண்டு வெளியே வீதிக்கு வந்தால் அங்கு எனது மாமாவுடன் இன்னொருவர். நீள முடி.. தலையில் சிவப்பு நிறத்திலான ரிப்பன் கட்டு. அதே வசீகரச் சிரிப்புடன் காண்டீபன்! “ராஜூ அண்ணே.. எப்படி இங்கே?” “அங்கே இனியும் இருப்பதில் அர்த்தமில்லை...” என்கிறார். தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகள் குறித்த கோபம் அவரிடமிருந்தது. பேசிக் கொண்டிருந்தோம். நிலவொளியில் அவர் கைத்துப்பாக்கி மின்னியது. ஈழம் நாடிய தமிழ் இளைஞர்கள் கைகளில் துப்பாக்கி ஏந்தித் திரியும் வரலாறு அதன்பின்னர் ஆரம்பித்தது.

அஞ்சலிகள் ராஜூ அண்ணா.. பலரும் “தமிழ் ஈழத்திற்கான ஆரம்பகால போராளி நீங்கள்” என்கிறார்கள். அது உண்மையும் கூட.. ஆனால் எனக்கொன்னவோ அபிமன்யுபோல “பல கோணங்களிலும் சுற்றி வளைத்ததால் பலிக்கடா ஆக்கப்பட்டவன்தான் இந்தக் காண்டீபன்” என்றுதான் தோன்றுகிறது.

நீங்கள் அனுபவித்த மனவலிகளை ஈழத்தைக் காதலிக்கும் ஒவ்வொருத்தரும் ஏதோ ஒரு வகையில் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சிறகுகளை விரிக்க விடாமல் தடுக்கப்பட்ட கழுகுபோன்ற தவிப்புடன் வாழ்ந்து மறைந்த ஆத்மா நீங்கள்.

## ஜனாதிபதி ரணிலும் எதிர்கால...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மீண்டும் ஒரு அறகலய மூண்டு அது “ரணில் கோகம” வாக மாறுவதை ஜனாதிபதி ஒருபோதும் விரும்ப மாட்டார். ஆனால், மீண்டும் மக்கள் வீதிக்கு இறங்காமல் இருப்பதென்பது அவரது அச்சுறுத்தல்களில் அல்ல, மக்களின் பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு அவரது அரசாங்கம் எடுக்கக் கூடிய பயனுறுதியுடைய நடவடிக்கைகளிலேயே தங்கியிருக்கிறது.

இன்று வீதியில் அறகலய இல்லாமல் இருக்கலாம். ஆனால், கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ உயர்ந்து கொண்டேயிருக்கும் விலைவாசி காரணமாக ஒவ்வொரு வீட்டின் சமையலறையிலும் அறகலய நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது.

இறுதியாக, ராஜபக்சாக்கள் போன்ற தலைவர்களுடன் ஒப்பிடும்போது விக்கிரமசிங்க ஒப்பீட்டளவில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு கூடுதல் மதிப்புக் கொடுப்பவராகவே அடையாளம் காணப்பட்டு வந்திருக்கிறார்.

ஆனால், அவர் இப்போது மக்கள் போராட்டங்களுக்கு எதிராக விடுக்கின்ற எதேச்சாதிகாரத்தனமான அச்சுறுத்தல்களை நோக்கும்போது “ஒருவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள், அவரின் உண்மையான சுபாவம் தெரியவரும்” என்று சொல்வார்களே... அந்த கூற்றுத்தான் நினைவுக்கு வருகிறது.

# அதிகாரப்பகிர்வு பேச்சுவார்த்தை என்பது
## அதிகார ஆட்சிச் சவாரிக்கான ஆரம்பமா?

**பனங்காட்டான்**

கார்த்திகை மாவீரர் மாதம். கார்த்திகைப் பூ மாவீரர் பூ. அவர்களின் வணக்கத்துக்குரிய பூ.

வன்னியின் அடர்ந்த காட்டுப் பகுதியில் இந்திய ராணுவம் சூழ்ந்து நிற்கையில், 1989 நவம்பர் 27ம் நாளன்று மாவீரர் நாள் பிரகடனமானது.

கடந்த 34 ஆண்டுகளுக்கிடையில் எத்தனையோ போராட்டங்களையும் பிரளயங்களையும் தமிழ் மக்கள் கண்டுள்ளனர். 2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதப்போர் உறைநிலை கண்டதாயினும், தமிழரின் நீண்டகால அபிலாசைகளுக்கான அரசியல் போராட்டம் தொடர்கிறது. அதற்குப் பலம் சேர்க்கும் வகையில் உலகளாவிய ரீதியில் மாவீரர் நாள் நினைவெழுச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

எதிர்கொள்ளாமல் எதனையும் அடைய முடியாது என்ற சிந்தனைக் கோட்பாடே தமிழினத்தை நின்று வழிகாட்டுவது. பிறப்பால் கிடைத்ததை இழக்காது காப்பதற்காகவே போராட்டம் வெவ்வேறு வடிவங்களில் நீட்சி பெறுகிறது. இதற்கான ஆயுதம், உரிமைக்கான உறுதிப்பாட்டை அச்சமின்றி வெளிப்படுத்துவதுதான்.

உறுதியின் உறைவிடமாக வாழும் மாவீரர்களை நெஞ்சிருத்தி இன்றைய பத்திக்குள் எழுதுகோலைப் பதிப்போம்.

மாவீரர்களுக்கு உரித்தான கார்த்திகை மாதத்தில் மீண்டுமொரு தடவை இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தை முளைவிடுகிறது. 2002ல் பிரதமராக இருந்தபோது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, மாபெரும் போராட்ட அமைப்பை பிளவுபடுத்திய ரணில் விக்கிரமசிங்க, இப்போது ஜனாதிபதி என்ற ஆசனத்தில் அமர்ந்தவாறு பேச்சுவார்த்தைக்கு கடை விரித்துள்ளார். 2015ல் உருவான நல்லாட்சி அரசில் தங்கள் கூட்டாளிகளாகவிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பை எவ்வகையாவது தனது வலைக்குள் வீழ்த்தி பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவிட வேண்டுமென்பது ரணிலின் தற்போதைய இலக்கு.

கடந்த செப்ரம்பரில் ஜெனிவாவில் 51:1 இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, அதனை எதிர்கொள்வதிலுள்ள சவால்களையும் சிக்கல்களையும் புரிந்து கொண்ட ரணில் அதிலிருந்து விடுபடுவதற்காகவே பேச்சுவார்த்தையை கையில் எடுத்துள்ளார். “எமது பிரச்சனைகளை வெளிச்சக்திகளின் தலையீடு இன்றி நாமே பேசித் தீர்த்துக் கொள்வோம்” என்ற சிந்தனை அவருக்குள் உதித்ததற்கு காரணமே ஜெனிவாதான்.

“சர்வதேச விசாரணைப் பொறிமுறை, போர்க்குற்றங்களைச் சேகரித்து எதிர்காலத் தேவைகளுக்காக அவற்றைப் பகுத்து ஆவணப்படுத்துதல், போர்க் குற்றவாளிகள் மீது உலக நாடுகள் தங்களின் சட்டங்களுக்குட்பட்டவாறு நடவடிக்கை எடுத்தல்” என்ற வாசகங்கள் ஜெனிவா தீர்மானத்தில் இடம் பெற்றிருப்பது ரணிலுக்கு சற்று இடைஞ்சலாக இருக்கிறது.

சர்வதேச நாணய வங்கி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து நிதி உதவி பெற வேண்டுமானால் புரையோடிப்போன உளநாட்டு இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்பதாகவாவது காட்ட வேண்டியது அவருக்கு கட்டாயமாகியுள்ளது.

இந்தப் பின்னணிகள்தான் ரணில் தீவிரமாக பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காரணம். இப்போது முன்னெடுக்கப்படும் கருவூலங்கள் பற்றி அணுகுவதாயிருந்தால், இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முதல் அத்தியாயமாக 1987 யூலை 29ல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் ரஜீவ் காந்தியும் செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் மேற்கொள்ளப்பட்ட 13வது திருத்தத்துக்கு என்ன நடைபெற்றது என்பதை அறிய வேண்டியது கட்டாயம்.

வடக்கு கிழக்குக்கென நிறைவேற்றப்பட்ட 13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமையை சிங்கள தேசமே இதுவரை பூரணமாக அனுபவித்துள்ளது. சிங்கள அரசியல்வாதிகளுக்கு சமுதாய அடிமட்டத்தில் அரசியல் அதிகாரம், ஆட்சிமுறை, நிதி ஒதுக்கீடு என்பவை குறித்து நுகர்வுச் சுவையை இது தாராளமாக வழங்கியது. 2009ன் பின்னர் இந்தியா கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே 2013ல் வடக்கு மாகாண சபைக்கு முதன் முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக அதுவும் இல்லாதுபோன நிலையில், தற்போது இந்தியாவின் ஒருவகை அழுத்தத்தின் காரணமாகவே ரணில் இனப்பிரச்சனைக்கு ஏதோ செய்ய விரும்புவது போன்று காட்சி கொடுக்க ஆரம்பித்திருப்பது பரகசியம்.

வடக்கு தமிழர் பிரச்சனை பற்றி வடக்கு அரசியல்வாதிகளுடன் பேசப் போவதாக முதலில் அறிவித்தார். இலங்கையின் 75வது சுதந்திர நாளான எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் இதற்கான தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படும் என்றார்.

சமாந்தரமாக, அடுத்த ஒரு வருடத்துக்குள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் எனவும் அவரே அறிவித்தார். அடுத்த ஒரு வருடம் என்பது 2023 நவம்பர் மாதமாகும். இப்போது ஜனாதிபதியாக ரணில் இருப்பதால் இந்த நாலு வருட முடிவில் அரசியலமைப்பின் பிரகாரம் அவர் புதிய ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்.

இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு முன்னர் எந்தவொரு தேர்தலையும் - மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள், நாடாளுமன்றம் எனப்படும் எவற்றுக்கும் தேர்தலை நடத்தும் எண்ணம் ரணிலுக்கு இல்லை. மாகாண, உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் சட்டங்களை மாற்ற இழுத்தடிக்கும் வரை தேர்தலை பின்தள்ளுவதே இவரது திட்டம்.

சில வாரங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் தேர்தல் ஆணையத் தலைவரை சந்தித்து எக்காரணம் கொண்டும் இந்தத் தேர்தல்களை பின்போடக் கூடாதென கேட்டுக் கொண்டனர். அப்படியான திட்டம் எதுவும் இல்லையென்று பதிலளித்த ஆணையாளர், ஏதாவது காரணத்தை முன்வைத்து தேர்தலைப் பின்போட நாடாளுமன்றம் முடிவெடுத்தால், தேர்தலை பின்போட வேண்டி வரும் என்று கூறியுள்ளார். ‘நீங்கள்தான் நாடாளுமன்றத்தில் அவ்வாறு முடிவெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்’ என்று அவர்களுக்கு ஆணையாளர் அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தார்.

ஒருபுறம் காரியங்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில், இனப்பிரச்சனை தீர்வு முயற்சியில் தாம் தீவிரமாக இருப்பதுபோல் ரணில் காட்டிக் கொண்டிருக்கிறார். நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தும் எண்ணம் தமக்குக் கிடையாது

**அதிகாரப்பகிர்வு என்ற பெயரில் என்ன நடைபெறுகிறது? பேச்சுவார்த்தை, உடன்பாடு, சம்மதம், தீர்வு என்று கூறிக்கொண்டு அனைத்தையும் ராணுவ நடவடிக்கையால் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் திட்டமா? முறிந்துபோன கதிரையில் அமர்த்தப்பட்டிருக்கும் ரணில், முன்னர் பலர் ஏறி விழுந்த குதிரையில் தாமும் ஏறி அதிகாரப்பகிர்வு என்ற பெயரில் அதிகாரச் சவாரி செய்ய ரெடியாகிறாறா?**



என்றும் அறிவித்துள்ளார். நாடாளுமன்ற அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன்தான் இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்பது இங்கு மறைபொருளாகக் காட்டப்படுகிறது.

பேச்சுவார்த்தை என்பதில் முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது அல்லது காட்டப்படுவது, தமிழ்க் கட்சிகள் - குறிப்பாக தமிழ் தேசிய கட்சிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பதுவே. இதுதான் இங்குள்ள சிக்கலான விடயமும்கூட.

1972ல் தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டபோது அப்போதைய தமிழ்த் தலைவர்கள் ஒரே மேடையில் கூடியது போன்ற நிலைமை நிரந்தரமாக தொடரவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் பின்னணியில் நின்று உருவாக்கிய வேளை, அவர்களின் அதிகூடிய வலிமை காரணமாக அனைவரும் ஒரே அணியில் இணைந்தனர். ஆனால் 2009க்குப் பின்னர் அந்த நிலைமை இல்லாமல் போய்விட்டது.

இப்போது தமிழ்த் தேசியம் என்ற பெயரில் மூன்று அணிகள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றன. அதில் முக்கியமானதாக பத்து உறுப்பினர்களுடன் உள்ள கூட்டமைப்பு பல கூறுகளாக பிளவுபட்டுள்ளது. அதே சமயம் சமஷ்டி என்ற ஒற்றை அம்சத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் மூன்றுக்குள்ளும் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. இந்த அடிப்படையில் இவர்களின் குரல் ஒன்றாக அமையலாமென தமிழ் மக்கள் நம்பக்கூடும்.

இது தொடர்பாக சம்பந்தன் தலைமையில் கூடிய நாடாளுமன்றக் குழு, வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டியை வலியுறுத்துவதென முடிவெடுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இதனோடு இணைந்ததாக சில நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ரணில் நடத்திய ஓரங்க நாடகம் இன்றைய அரசியலில் விசித்திரமானது.

ஓட்டப் போட்டி ஒன்றின்போது நடுவராக இருப்பவர் போட்டியாளர்களை ஒவ்வொருவராகப் பார்த்து “நீங்கள் ரெடியா” (நீங்கள் தயாரா) என்று கேட்பது போன்ற பாணியில், அதிகாரப் பகிர்வு பேச்சுவார்த்தைக்கு ஒவ்வொரு கட்சியினரிடமும் சம்மதம் கேட்டார்.

சஜித் பிரேமதாச அணியினர் தாங்கள் எப்போதுமே அதிகாரப் பகிர்வுக்கு தயார் என்றனர். பொதுஜன பெரமுனவின் சார்பில் பதிலளித்த மகிந்த ராஜபக்ச தமது தலை அசைவால் சம்மதத்தைக் காட்டினாலும் பின்னர் உடன்படுவதாக வாயால் பதிலளித்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில் இரண்டு பிரதான கட்சிகள் நடந்து கொண்ட விதம் இப்போது நினைவுக்கு உட்படுத்த வேண்டியது முக்கியம். அப்போது பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாச இந்த ஒப்பந்தத்தை பகிரங்கமாக எதிர்த்ததோடு அதிகாரப் பகிர்வை வன்மையாகக் கண்டித்தார். ராஜீவ் காந்தி கொழும்பில் அணிவகுப்பு மரியாதையில் கலந்து கொண்டபோது அவர் மீது தாக்குதல் நடத்த முனைந்த கடற்படைச் சிப்பாயை அடுத்த பொதுத் தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளராக்கி நன்றிப் பரிசையும் வழங்கினார்.

ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட போது ஜே.வி.பியினர் நாடு முழுவதும் கிளர்ச்சியை ஏற்படுத்தி வன்செயல்களைத் தூண்டிவிட்டு கொலைகளையும் கொள்ளைகளையும் மேற்கொண்டனர். அன்றைய பிரதமர் பிரேமதாசவின் புதல்வரான இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும், ஜே.வி.பியினரும் இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதால் திரிகரண சுத்தியாக அதிகார பகிர்வு அடிப்படையிலான பேச்சுவார்த்தைக்கு எவ்வகையில் பங்களிப்பார்கள் என்பதை இப்போது அளவிட முடியாது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ரணிலின் வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றபோது கூட்டமைப்பு இதனைப் புறக்கணித்தது. இதன் பின்னர் இதுபற்றி விளக்கம் கொடுத்த கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன், ரணிலின் பேச்சுவார்த்தை நல்லெண்ண முயற்சிக்கான சமிக்ஞையாகவே தாங்கள் வாக்களிப்பை புறக்கணித்ததாக விளக்கமளித்தார். புறக்கணிப்பு என்பது பகிஷ்கரிப்புத்தான். ஆனால் சுமந்திரன் வழக்கம்போல தலையைச் சுற்றும் பாணியில் விளக்கம் கொடுத்தது புதுமையான அரசியல் விண்ணாணம். இப்படித்தான் நாடகங்கள் தொடருமானால் ரணிலின் பேச்சுவார்த்தை முளைப்பதற்கு முன்னரே காணாமலானாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

ரணிலும் சும்மா இருக்கவில்லை. மீண்டும் போராட்டத்தின் மூலம் அரசை வீழ்த்த எவராவது முயன்றால் ராணுவத்தைக் களமிறக்குவேன், அவசரகால சட்டம் பிரகடனமாகும் என்று ஜே.ஆர். பாணியில் அச்சுறுத்தும் பிரகடனங்களைச் செய்துள்ளார். உண்மையிலேயே என்ன நடைபெறுகிறது. பேச்சுவார்த்தை, உடன்பாடு, சம்மதம், தீர்வு என்று கூறிக்கொண்டு அனைத்தையும் ராணுவ நடவடிக்கையால் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் திட்டமா?

முறிந்துபோன கதிரையில் அமர்த்தப்பட்டிருக்கும் ரணில், முன்னர் பலர் ஏறி விழுந்த குதிரையில் தாமும் ஏறி அதிகாரப்பகிர்வு என்ற பெயரில் அதிகாரச் சவாரி செய்ய ரெடியாகி ராறா? அதற்குத்தானா பேச்சுவார்த்தை என்ற நாடகம்?

# தமிழருக்கு இந்தியா நிச்சயம் ஏதாவது செய்தாகவேண்டும்!

**தமிழர்களின் இனப்பிரச்னை விடயத்தில் தீர்வு ஒன்று விரைவில் எட்டப்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இப்போது அடிக்கடி கூறி வருகின்றார். தனது வரவு - செலவுத் திட்ட உரையிலும் அவர் அதைக் குறிப்பிடத் தவறவில்லை. தீர்வு குறித்து பேசுவதற்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஓரணியாக வருமாறும் அவர் அழைத்திருக்கின்றார்.**

**தீர்வுக்கான பேச்சு என்ற விடயம் இப்போது அதிகம் அலசப்படும் நிலையில் அது எவ்வாறான தீர்வு என்ற விடயமும் அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.**

**13ஆவது திருத்தச் சட்டம் ஊடான தீர்வு, அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வு என்று பல கோணங்களில் இந்த தீர்வு விடயம் குறிப்பிடப்பட்டு வருகின்றது.**

**இந்த தீர்வு விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் குறித்து வெளியிடப்படும் கருத் துக்கள் இவை:-**

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## இந்தியாவை வைத்தே எதையாவது பெறலாம்



**சீ.வீ.கே. சிவஞானம்**
வடமாகாண அவை தலைவர்

எங்களை பொறுத்தவரை இந்தியா - இலங்கை ஒப்பந்தம் என்பது பெரிய விடயமாகும். அதனை இந்தியா சாதித்துள்ளது. வடக்கு - கிழக்கு இணைப்பை கூறியுள் ளது. அதேபோல தமிழர் தாயகத்தை உறுதிப் படுத்தி இருக்கின்றது. குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை உறுதிப் படுத்தி உள்ளது.

ஆனால் நடைமுறைக் காலத்தை எடுத்துக்கொண் டால் இந்தியா நடுநிலைமை என்றுகூட கூறமுடியாது. ஏனென்றால் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை அமர்வின்போது ஆணையாளரின் அறிக்கை மீது உரையாற்றிய இந்தியாவின் பிரதிநிதியினால், 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி மாத்திரமல்லாது அதிகாரப் பகிர்வு என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

முன்னர் எப்போதும் அந்த விடயம் இந்தியாவால் சுட்டிக்காட்டப்படவில்லை. அதேபோல இறுதியான அறிக்கையில் இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக சில முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன.

இந்தியா நடுநிலை என்று கூறுவதற்கு அப்பால் நாசூக்காக பல விடயங்களைச் செய்து வருகின்றது. இந்தியாவானது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என கூறுவது அவர்களுக்குரிய உரித்து. அதனை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்பதே அவர்களுடைய நிலைப்பாடு.

இன்றைய நிலையிலே வடக்கு ஆளுநர் தன்னிச்சையாக எமது மாகாணத்துக்குரிய அதிகாரத்தை பிடுங்கும் முயற்சியை இந்திய அரசாங்கம் கட்டாயமாக கவனத்தில் எடுக்கவேண்டும். இந்தியாவினால் கொண்டுவரப்பட்ட இந்த மாகாண சபை முறையில் ஒரு ஆளுநர் தன்னிச்சையாக மாகாண சபை அதிகாரத்தை குறைக்கும் முகமாக செயல்படுகின்றார் என்பதை இந்திய அரசாங்கம் கட்டாயமாக கவனத்தில் எடுக்கவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் மாத்திரமே ஒரு ஆளுநருக்கு உண்டு. ஆனால் சட்டவாக்கத்திற்குரிய அதிகாரம் ஆளுநருக்கு இல்லை.

இது இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாண சபைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தை மீறி மாகாண ஆளுநர் சட்டத்தை பிழையாக கையில் எடுத்து செயல்படுத்துவது தொடர்பில் இந்தியா கட்டாயமாக கவனம் எடுக்கவேண்டும்.

அரசாங்கத்தின் பிரதிநிதி மாகாணத்துக்கு இருக்கின்ற அதிகாரத்தை பிடுங்க பார்க்கின்றார். மாகாண சபை சட்டம் என்று நாங்கள் கூறும் நிலையைக்கூட இந்தியாதான் இங்கே ஏற்படுத்தி இருந்தது.

அண்மையில் வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி உரையாற்றும்போது, வெளியாரின் தலையீடு இல்லாது எங்களுடன் பேச வாருங்கள் என நாசுக்காக கூறிய விடயம் இந்திய நாட்டைத் தவிர்த்து எங்களுடன் பேச வாருங்கள் என்பதுதான்.

ஆகவே இந்தியா எங்களுக்கு ஒரு பலம். அந்த நாட்டின் பலத்தை வைத்துத்தான் எமக்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் இந்தியாவின் செயற்பாடுகள் போதாது என்ற விடயம் உண்மைதான். ஆனால் இந்தியா எங்கள் பக்கம் தான் அதிகம் சாய்ந்துள்ளது என்பது உண்மை.

ஐ.நா. சபையை பொறுத்தவரை நடுநிலைமை என்பதற்கு அப்பால் அவர்கள் எமக்குச் சார்பாக பல விடயங்களை எடுத்துரைக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு சாதகமான பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடி மற்றும் ஏனைய இக்கட்டான நிலையில் இந்தியா தான் எமக்கு கை கொடுத்துள்ளது. தற்போதைய நிலையில் இந்தியாவின் வகிபாகம் காணாது - போதாது என்ற கருத்துக்கு நான் உடன் படுகின்றேன்.

இந்தியா இதனையும் தாண்டி இலங்கை அரசாங்கத்திற்கு கட்டாயம் அழுத்தங்களைக் கொடுத்து தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முனைய வேண்டும்.

அதிகார பகிர்வு என்ற விடயத்தை ஐ.நா சபையில் எடுத்துரைத்த இந்திய நாடு, இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்குரிய தீர்வை வழங்க அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இந்தியா நடுநிலை வகிக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தியா நடுநிலை வகித்தாலும் தமிழர்களுக்கு சார்பாக பல செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்பது உண்மை. குறிப்பாக மாகாண சபைத் தேர்தல் மற்றும் ஏனைய பல விடயங்களில் இந்தியா எமது பக்கம் இருந்ததால் நமக்கு பல விடயங்கள் நடைபெற்று இருக்கின்றன. தொடர்ந்து எமக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு தேவை - என்றார்.

## தமிழரின் நிரந்தர தீர்வுக்கு உதவவேண்டும் இந்தியா



**எஸ்.தர்சன்**
யாழ். பல்கலைக்கழக மாணவன்

இன்றைய காலகட்டத்தில் எமது அயல் நாடாக இருக்கும் இந்தியா ஒரு தொப்புள் கொடி உறவாக இலங்கை தமிழர்களுக்கு பல்வேறுபட்ட நேரங்களில் உதவி செய்கின்றபோதிலும் அவர்களின் உதவி ஒரு சந்தேகத்துக்கிடமான நோக்கத்திலேயே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

காரணம் என்னவென்றால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்று கொடுக்க வேண்டும் என கூக்குரலிடும் இந்தியா சர்வதேச மட்டங்களில் பார்க்கும்போது இந்தியாவின் நிலை நடுநிலையாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக சீனா மற்றும் ஏனைய நாடுகள் வெளிப்படையாக தமது உண்மையான முகத்தை காண்பித்து இலங்கைக்கு ஆதரவாக அரசாங்கத்தோடு பயணிக்கின்றன.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இடம்பெறும் தமிழர்களின் விடயத்தில் எதிர்ப்பை வெளியிட்டு வெளிப்படையாகவே அரசாங்கத்துக்குச் சார்பாக செயற்படுகின்றன.

இந்தியா அவ்வாறு செயல்படாது நடுநிலையான வகிபாகத்தை வைத்துக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக இந்தியாவின் போக்கு, அங்கிருக்கக் கூடிய அரசியல்வாதிகளின் போக்காக இருக்கலாம் அல்லது தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் போக்காக இருக்கலாம், இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்று கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அதனை பல சந்தர்ப்பங்களில் சாதகமாக பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வினை இலகுவாக பெற்று கொடுத்திருக்கலாம்.

13 ஆவது திருத்த சட்டத்துக்குள்ளாக மாகாண சபை அமைய வேண்டும் எனக் கூறுகின்றார்கள். குறைந்த அளவு அந்த மாகாண சபை அதிகாரத்தைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத அளவில் இந்தியா இருக்கின்றது.

தமிழர்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாண பிரதேசத்தில் வேறு எந்த நாட்டின் தூதரகங்களும் இயங்காத நிலையில் யாழ்.இந்திய துணை தூதரகம் செயற்பட்டு வரும் நிலையிலும்கூட எவ்வளவு தூரம் இந்த தமிழ் மக்களுக்கான நன்மைகள் இங்கே வந்து சேரும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

குறிப்பாக சர்வதேச விடயம் என்று பார்க்கும் போது ஐக்கிய நாடுகள் சபையில் எங்களுக்காக அவர்கள் குரல் கொடுப்பதைக் காட்டிலும் அவர்கள் நடுநிலை வகிப்பது என்பது பாரிய ஒரு பிரச்னையாக இருக்கின்றது.


ஒரு பல்கலைக்கழக மாணவர் என்ற ரீதியில் இந்த இடத்தில் இந்த விடயத்தை பதிவு செய்து கொள்கின்றேன்.

ஆகவே நிரந்தர தீர்வு என்ற விடயத்தில் ஒரு முழுமையான பங்களிப்பை வகித்து சீனா இலங்கைக் குள் முழுமையாக வந்து விடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் செயல்படுகின்றார்கள்.

அதை விடுத்து நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் முழு முயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்தை பகைக்கக் கூடாது என்று நினைத்தால் எந்த காலத்திலும் இந்தியா தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்று கொடுக்கமுடியாது என்பது நிதர்சனமான உண்மை - என்றார்.






**திரைப்படம் - கலகத் தலைவன்**
**இயக்கம் - மகிழ் திருமேனி**
**இசை - ஸ்ரீகாந்த் தேவா, அரோல் கொரேலி**
**நடிப்பு - உதயநிதி ஸ்டாலின், நிதி அகர்வால், ஆரவ்**

பெருநிறுவனங்களை பற்றி இதற்கு முன் தமிழ் சினிமாவில் சில படங்கள் வந்துள்ளன. அவற்றிலிருந்து வித்தியாசப்பட்டு ஒரு கதையைக் கொடுக்க வேண்டும் என இயக்குநர் மகிழ்திருமேனி முயற்சித்து புதுக்கோணத்தில் இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறார். தங்களின் ஆதாயத்துக்காக பெரு நிறுவனங்கள் என்னவெல்லாம் செய்யும் என்பதுதான் இந்தப் படத்தின் மையக் கதை. அதோடு சில பொருளாதாரப் பிரச்னைகளைப் பற்றியும் படம் ஆங்காங்கே விவரித்து சொல்கிறது.

வஜ்ரா என்ற இந்தியாவின் மிகப் பெரிய தொழில் நிறுவனம் புதிய கனரக வாகனம் ஒன்றை உருவாக்குகிறது. அது வெளியில் வந்தால் சந்தையில் தனி ராஜாவாகத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் "எமிஷன் டெஸ்ட்" இல் அந்த வாகனம் அரசு அனுமதிக்கும் அளவை விட அதிகப் புகையை வெளியிடுவதால் தோல்வியடைகிறது. இருப்பினும், அதை இரகசியமாக வைத்து வாகனத்தை சந்தையில்விட நிர்வாகம் முடிவு செய்கிறது. இதனிடையே, அந்த இரகசியம் ஊடகம் மூலம் வெளியில் வருகிறது.

இதனால் அதிர்ச்சியடையும் நிர்வாகம், தங்கள் நிறுவன இரகசியம் எப்படி வெளியே போகிறது என்பதைக் கண்டுபிடிக்க பெருநிறுவனங்களாக பல வேலைகளையும் செய்து தரும் ஆரவ்வை அது பற்றி விசாரிக்கச் சொல்கிறது. அதே நிறுவனத்தில் சென்னைக் கிளையில் வேலை செய்து கொண்டிருக்கும் உதயநிதிதான் அந்த இரகசியங்களை வெளியிடுபவர். அவர் ஏன் அதைச் செய்கிறார்?, அதற்கான காரணம் என்ன என்பது உச்சகாட்சியில்தான் தெரிய வருகிறது. உதயநிதி தான் அதைச் செய்பவர் என்பதை ஆரவ்வால் கண்டுபிடிக்க முடிந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஒரு பெருநிறுவனம் தங்கள் நிறுவனத்துக்காக இப்படியெல்லாம்கூட செய்யுமா என்பதை அதிர்ச்சியூட்டும் விதத்தில் சொல்லியிருக்கிறார் இயக்குனர். படத்தின் கதாநாயகன் உதயநிதி அமைதியாக எல்லா விஷயங்களையும் செய்து கொண்டிருக்க, ஆரவ் அதிரடியாக உதயநிதியைத் தேட ஆரம்பிக்கிறார். இவர்களுக்கு இடையிலான கண்ணாமூச்சி ஆட்டம்தான் படத்தின் திரைக்கதை. அதை எந்தக் குழப்பமும் இல்லாமல் மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர். உருவாக்கத்தில்எந்த அளவுக்கு பிரம்மாண்டத்தைக் காட்ட முடியுமா அதையும் செய்திருக்கிறார்.

கடந்த சில படங்களாக உதயநிதி தன்னுடைய கதைத் தேர்வு, கதாபாத்திரத் தேர்வில் அதிக கவனம் செலுத்தி வருவது தெரிகிறது. காதல், நகைச்சுவை ஆகியவற்றிலிருந்து கொஞ்சம் விலகி கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களைத் தேர்வு செய்ய ஆரம்பித்துள்ளார். அந்த விதத்தில் இந்தப் படம் அவருக்கு ஒரு முக்கியமான படமாக அமைய வாய்ப்புள்ளது.

நிறுவனத்தின் நிதி ஆய்வாளர் திருமாறன் கதாபாத்திரத்தில் உதயநிதியின் நடிப்பு திருத்தமாக அமைந்துள்ளது. நாயகத்தன்மை வெளிப்படுத்த வேண்டும் என அவரின் கதாபாத்திரத்தில் கமர்ஷியல் ஹீரோ போல காட்டாமல் இயல்பாகக் காட்டியிருக்கிறார் இயக்குனர். அதை சரியாக உள்வாங்கிக் கொண்டு அலட்டல் இல்லாமல் நடித்திருக்கிறார் உதயநிதி.

படத்தின் வில்லனாக ஆரவ். பெரு நிறுவனங்களுக்காக எதையும் செய்யும் ஒரு கதாபாத்திரம். நிறுவனங்களை எதிர்த்து போராடும் மக்களின் போராட்டங்களையே ஒன்றுமில்லாமல் செய்யக் கூடியவர். எங்கு வேண்டுமானாலும் சென்று அவருக்கு வேண்டியதை செய்து முடிக்கும் அதிகாரம் கொண்டவர். தங்களை யார் என்றே காட்டிக் கொள்ளாத இரகசிய பெருநிறுவன முகவர் என்று சொல்லலாம். ஆணவம், அதிகாரம், வன்மம் என ஆரவின் கதாபாத்திரம் இரண்டாவது நாயகன் என்று சொல்லுமளவுக்கு படத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. வேறு நாயகன் யாராவது அந்தக் கதாபாத்திரத்தில் நடித்திருந்தால் இப்படத்தை "இரு நாயகர்" கதை என்று என்று சொல்லியிருப்பார்கள். ஆரவைத் தேடி இனி அதிக வில்லன் வாய்ப்புகள் வரலாம்.

உதயநிதியின் இணையாக நிதி அகர்வால். மருத்துவம் படிக்கும் மாணவி. அழகாகவும், பக்குவமாகவும் நடித்திருக்கிறார். இருவருக்கும் இடையே காதல் காட்சிகள் இல்லை என்றாலும் அவர்கள் சந்தித்துக் கொள்ளும் காட்சிகளே "கலவரமாய்" உள்ளன. அதே சமயம், படத்தின் மையக் கதைக்கு இந்தக் காதல் கொஞ்சம் வேகத் தடையாகவும் அமைந்துவிட்டது. கலையரசன் கதாபாத்திரம் படத்தில் எதிர்பாராத ஓர் அறிமுகம். அவருக்கும் உதயநிதிக்கும் இடையே உள்ள நட்பு நெகிழ வைக்கும் ஒன்று. மற்ற கதாபாத்திரங்கள் சில நிமிடங்களே வந்து போகின்றன.

தில் ராஜ் தன் ஒளிப்பதிவில் படத்துக்கான உருவாக்க தரத்தை மேன்மைப்படுத்தி இருக்கிறார். உச்சக்காட்சி படமாக்கம் குறிப்பாகப் பாராட்ட வைக்கும் ஒன்று. ஸ்ரீகாந்த் தேவாவின் பின்னணி இசை ஆரம்பத்திலிருந்தே படத்துடன் ஒன்றவைக்கிறது. இம்மாதிரியான படத்துக்குப் பாடல்களே தேவையில்லை.

சில காட்சிகளை விவரமாகச் சொல்ல வேண்டுமென அவற்றை பொறுமையாக நீளமாக சொல்கிறார். குறிப்பாக, திருச்சி புகையிரத சந்திப்பில் நடக்கும் துரத்தல்கள், உதயநிதி – நிதி அகர்வால் காதல் சந்திப்புகள், உச்சக்காட்சியின் அதிகப்படியான நீளம் ஆகியவற்றை குறைத்து, எடிட்டிங்கில் ஒரு வேகத்தை சேர்த்திருந்தால் படம் இன்னும் விறுவிறுப்பாக நகர்ந்திருக்கும். சில காட்சிகள் சீக்கிரம் முடிங்கப்பா என பொறுமையை சோதிக்கிறது. படம் முடிந்த பின் யோசித்துப் பார்த்தால் விஜயின் "கத்தி" படக் கரு ஞாபகம் வந்து போகிறது

இருப்பினும் பொருளாதாரம், பெரு நிறுவனங்களின் ஆதிக்கம், நிறுவன கழிவுகளால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள், ஒரு பெரிய நிறுவனம் மூடப்பட்டால் அதன் தொடர்ச்சியாக சாதாரண மக்களுக்கும் ஏற்படும் இழப்புகள் என இந்த "கலகத் தலைவன்" சில புதிய தரவுகளை அழுத்தமாய் பதிவு செய்திருக்கிறார்.





## ரஜினி முருகன் 2

சிவகார்த்திகேயன் நடிப்பில் வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன், சீமராஜா போன்ற படங்களை இயக்கிய பொன்ராம் இவரின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிப்பில் உருவான டி. எஸ். பி. திரைப் படம் வரும் டிசெம்பர் வெளியாகிறது.

சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான ரஜினி முருகன் படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கவுள்ளார் என்று பொன்ராம் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் பாகத்தில் சிவகார்த்திகேயன், சூரி ஆகிய இருவருமே இரண்டு வேடங்களில் நடிக்கிறார்கள். கீர்த்தி சுரேஷ், ஸ்ரீதிவ்யா நாயகிகளாக நடிக்க, சத்யராஜ், ராஜ்கிரண் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

## விரைவில் நயன் படம்



"நேரம்" படத்தின் மூலம் தமிழ் மற்றும் மலையாள திரையுலகில் இயக்குநராக அறிமுகமானவர் அல்போன்ஸ் புத்திரன். அதைத் தொடர்ந்து "பிரேமம்" படத்தை இயக்கி இருந்தார். இது பெரும் புகழை அவருக்கு பெற்றுக் கொடுத்தது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்கு பிறகு இவர் இயக்கும் படம் "கோல்ட்". பிரித்விராஜ் கதாநாயகனாக நடிக்கும் இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருக்கிறார். இந்தப் படம் விரைவில் வெளியாகவுள்ளது.

## வேகம் பிடிக்கும் துணிவு



அஜித்தின் 'துணிவு' படத்துக்கு 12 நாள்களில் குரல் கொடுத்து முடித்து அசத்தியிருக்கிறார் எச். வினோத். 'பொங்கல் வெளியீடு' எனத் தேதி குறிக்கப்பட்ட நிலையில், 'கொஞ்சம் பொறுமையாக வரலாமே...' எனத் தயாரிப்பாளர் போனி கபூரிடம் சொன்னாராம் எச்.வினோத்.

தன் தரப்பு நெருக்கடியை போனி கபூர் சொல்ல, எந்த மறுப்பும் சொல்லாமல், தடாலடி வேகத்தில் குரல் கொடுப்பு பணியை முடித்தாராம் வினோத். அஜித்தும் நான் கைந்து நாள்களில் தன் குரல் கொடுப்பை முடித்துக் கொடுத்து ஆச்சர்யப்படுத்தியிருக்கிறார்.

## தி டீச்சர்

தமிழ் திரையுலகுக்கு சிந்து சமவெளி படத்தின் மூலம் அறிமுகமானவர் அமலாபால். இப்போது முன்னணி நாயகியாக உள்ள அமலா பால். இந்நிலையில் அமலா பால் மலையாளத்தில் நடித்திருக்கும் "தி டீச்சர்" படத் தின் டிரைலர் வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தின் டிரைலர் அண்மையில் வெளியானது. இது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வைரலாகி வருகிறது.



# ரொனால்டோவின் அசாத்திய சாதனை

பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் போர்த்துக்கல் மற்றும் கானா அணிகள் விளையான. இந்தப் போட்டியில் 65ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பில் கிறிஸ் டியானோ ரொனால்டோ கோல் அடித்து இந்த உலகக் கிண்ணத்தில் அணிக்கான முதல் கோலை பதிவு செய் தார். இன்று கோல் அடித்ததன் மூலம் லயோனல் மெஸ்ஸி இதுவரை வைத்திருந்த சாதனையை தகர்த்து புதிய சாதனையை படைத்தார் ரொனால்டோ.

ஐந்து உலகக் கிண்ணத் தொடரில் கோல் பதிவு செய்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

பிபா உலகக் கிண்ண உதைபந் தாட்ட தொடரில் போர்த்துக்கல் மற்றும் கானா அணிகள் விளையான. இந்தப் போட்டியில் 65ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பில் கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடித்து இந்த உலகக் கிண் ணத்தில் அணிக்கான முதல் கோலை பதிவு செய்தார். இன்று கோல் அடித் ததன்மூலம் லயோனல் மெஸ்ஸி இதுவரை வைத்திருந்த சாதனையை தகர்த்து புதிய சாதனையை படைத்தார் ரொனால்டோ.

மெஸ்ஸி நான்கு வெவ்வேறு உலகக் கிண்ணப் போட்டிகளில் (2006, 2014, 2018, 2022) கோல் அடித்த ஐந்தாவது வீரர் என்ற சாதனையை படைத்திருந்தார். இதற்கு முன்னதாக பீலே, உவே சீலர், மிரோஸ்லாவ் க்ளோஸ் மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரும் இதே சாதனையை செய்திருந்தனர். என்றாலும், கிறிஸ்டியானோ ரொனால்டோ இன்றைய போட் டியில் கோல் அடித்ததன்மூலம் மெஸ்ஸியின் சாதனையை முந்தி 2006, 2010, 2014, 2018, 2022 ஆகிய ஐந்து உலகக் கிண்ணங் களில் கோல் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

அதேபோல், பிபா உலகக் கிண்ண வரலாற்றில் கோல் எண்ணிக்கையில் அதிக கோல் அடித்த வீரர் என்ற சாதனையை யும் ரொனால்டோ செய்துள்ளார். மெஸ்ஸி இதுவரை பிபா உலகக் கிண்ணத் தொடர்களில் இதுவரை 20 போட்டிகளில் விளையாடி 7 கோல்களை அடித்துள்ளார். அதே நேரம், உலகக் கிண்ண தொடர் களில் இதுவரை 7 கோல்கள் அடித்திருந்த ரொனால்டா எட்டாவது கோலைப் பதிவு செய்து அசத்தினார்.

போர்த்துக்கல் அணியை பொறுத்தவரை புகழ்பெற்ற வீரர் யூசிபியோ உலகக் கிண்ணத் தொடரில் 9 கோல்கள் அடித்ததே அதிகபட்ச சாதனையாக இருக்கி றது. இதை முறியடிக்க, ரொனால் டோவுக்கு இன்னும் இரண்டு கோல் தேவைப்படுகிறது. இந்த கட்டார் உலகக்கோப்பை தொடரி லேயே அதை அவர் முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.





# அதிர்ச்சி கொடுக்கும் ஆசிய அணிகள்

ஜேர்மனி மற்றும் ஜப்பான் அணிகள் இடையான இப்போட்டியின் முடிவில், 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பான் அணி வெற்றி பெற்றது. ஜப்பான் அணி,நான்கு முறை சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி அணியை வீழ்த்தி உதைபந் தாட்ட ரசிகர்களை வியப்படையச் செய்தது.

இந்த முறை உலகக் கிண்ணத் தொடரில் ஆசிய அணகள் ஜாம்பவான் அணிகளுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளன.

நான்கு முறை சம்பியனான ஜேர் மனி அணியும் ஜப்பான் அணியும் மோதின. இதில் போட்டி தொடங்கு வதற்கு முன்பு ஜேர்மனி வீரர்கள் அனைவரும் வாயை மூடி புகைப் படம் எடுத்துக் கொண்டனர். பிபா அமைப்பு, “ஒரே காதல்” என்ற வாசகம் பொறித்த கை பட்டியை அணிந்து விளையாட தடை விதித் துள்ளது. இந்தத் தடை, எங்கள் குரலை ஒடுக்குவதற்குச் சமம் என்ற கருத்தைப் பதிவு செய்வதற்காக இவ் வாறு செய்துள்ளனர்.

ஜேர்மனி மற்றும் ஜப்பான் அணிகள் இடையான இப்போட் டியின் முடிவில், 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பான் அணி வெற்றி பெற்றது. ஜப்பான் அணி,நான்கு முறை சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி அணியை வீழ்த்தி உதைபந் தாட்ட ரசிகர்களை வியப்படையச் செய்தது.

ஆட்டம் முடிந்த பிறகு ஜப்பான் அணியின் ரசிகர்கள் சிலர், மைதானத் தில் உள்ள குப்பைகளை அகற்றினர். இந்த புகைப்படங்கள் இணையத்தில் பிரபலமாகி வருகின்றன. இதை பலரும் பாராட்டி வருகின்றனர்.

ஜப்பானிய ரசிகர்கள் மைதானத் தில் உள்ள குப்பைகளையும் பிளாஸ் டிக் பைகளையும் அகற்றும் காணொ லியை உலகக் கோப்பை உதைபந் தாட்ட போட்டியை நடத்தும் பிபா அமைப்பு தனது அதிகாரப்பூர்வ ருவிற்றர் பக்கத்தில் பகிர்ந்து பாராட் டியுள்ளது.

மெஸ்ஸி தலைமையிலான ஆர் ஜென்ரீனா அணியை சவுதி அரே பியா அணி வீழ்த்தியது. ஆர்ஜென் ரீனா அணி, உலகக் கோப்பையின் 92 வருட வரலாற்றில் சவுதி அரேபி யாவிடம் முதன்முறையாக தோல்வி யடைந்துள்ளது.

இந்த வெற்றி, உதைபந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சி யையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத் தியுள்ளது. இதுகுறித்து, சமூக வலை தளங்களில் விமர்சனமும் விவாதங் களும் எழுந்த வண்ணமே உள்ளன.

உண்மையில், ஆர்ஜென்ரீனா அணி முதல் பாதியில் இரண்டு, மூன்று கோல்களை அடித்திருக்க முடியும் என்றும், ஆனால், அணி யின் சில வீரர்கள் போதுமான உடற்தகுதியில் இல்லை, என தெரிவிக் கின்றனர். கிறிஸ்டியன் ரொமேரோ, லின்ட்ரோ பேரிடிஸ், ஏஞ்சல் டி மரியா ஆகிய வீரர்கள் காயம் காரணமாக சரியாக விளையாடவில்லை என குற்றம் சாட்டுகின்றனர்.

ஜேர்மனி அணியை ஜப்பான் அணி வீழ்த்தியதை கொண்டாடும் விதமாக, ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் சாலைகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக கொண் டாடும் காணொலி ஊடகங்களில் வெளியாகி உள்ளது. தெருக்கள், வணிக வளாகங்கள் மற்றும் சாலை களில் ஜப்பான் உதைபந்தாட் டத்தை ரசிகர்கள் கொண்டாடும் காணொலிகள் ருவிற்றரில் பகிரப் பட்டு வருகின்றன.



மாலினி அஜந்தன்

# மாவீரர் வாரத்தில்

## மீண்டும் தீர்வுக்கான அழைப்பும், தமிழ்க் கட்சிகளின் சந்திப்பும்!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கொழும்பில் ஒன்றுகூடி, தமிழர் இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத்துடன் பேச வேண்டிய விடயப்பரப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில், தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் நாடாளுமன்றில் அறிவிப்பொன்றை விடுத்திருந்த நிலையில் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூன்று பிரதான நிபந்தனைகளை அரசாங்கத்திடம் விதிப்பதற்கு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

“நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்,

அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்பட வேண்டும்,

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியான வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வை வழங்கும் வகையில், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்” போன்ற நிபந்தனைகளே அவையாகும்.

இதனைத் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து ஓரணியில் எடுத்துள்ளன.

இந்த நிபந்தனைகளை தமிழ்த் தரப்புக்களின் திட்டவட்ட முடிவுகளாக, ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் வலியுறுத்த, தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக அறியக்கிடைக்கின்றது.



நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன், “13 பிளஸ் என்பதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் 13 என்பது ஒற்றையாட்சியின் கீழ் இருப்பது. ஒற்றையாட்சியின் கீழ் எமக்கு நன்மைகள் எதுவும் கிடைக்காது என்பதை நாம் அறிவோம். அதனால் தான் ஒற்றையாட்சி இல்லாமல் சமஷ்டி ரீதியான அரசியல் யாப்பை நாம் கோரிக் கொண்டிருக்கின்றோம். சமஷ்டியைக் கோரும்போது, வட கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல மலையக மக்களுக்கும் அது நன்மை பயக்கும்” என்று தெரிவித்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இச்சந்திப்புக் குறித்து கூறுகையில், புதிய அரசியல் அமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மைத்திரி- ரணில் ஆட்சியின் போதும், அதற்கு முன்னரும் இடம்பெற்றிருந்த போதிலும், அவ்வாறான அரசியல் அமைப்பு எதுவும் கொண்டுவரப்படவில்லை என்றும், எனினும் இப்போதான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இப்பேச்சுக்கள் புதிய அரசியலமைப்பு எப்போது வரும் என்பதையோ அல்லது கடந்த காலங்களைப் போல பேச்சிலேயே முடிந்துவிடுமோ? என்ற கேள்விகளை எழுப்புவதாகவும் குறிப்பிட்டார். இருந்தாலும் அரச தரப்பின் அழைப்பினைப் புறக்கணிக்காது தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் மிக அவசியமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இது குறித்துப் பேசும்போது, சமஷ்டி அடிப்படையிலான அரசியலமைப்பு, அதியுச்ச அதிகாரப்பகிர்வுடன் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை எனவும், இதற்காக ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் தொடர்ந்து பேசப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், புதிய அரசியலமைப்பு மாற்றம் வரவேண்டும் என அனைவரும் விரும்புவதாகவும், அரசாங்கத்தரப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்து ஒரு தீர்வைத் தர இணங்கியிருப்பதாகவும், குறிப்பாக மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ் தீர்வுத் திட்டத்திற்கு இணங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு முன்பாக தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து, தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ந்தும் கலந்துரையாட இணக்கம் வெளியிட்டுள்ளதுடன், அந்த சந்திப்புக்களின்போது மேலதிக தீர்மானங்களை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பான தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்த சந்திப்பு வரும் வாரமளவில் இடம்பெறவுள்ளது.

முன்னதாக, தமிழர் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில், தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட அறிவிப்பையடுத்து, கடந்த 15 ஆம் திகதி, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (18 ஆம் பக்கம் பார்க்க...)

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**ஏ. ஜெனிஸ்ரன், இரண்டாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** மாவீரர் வாரம் தொடங்கிய அன்று பாராளுமன்றத்தில் முதல் ஆளாக மாவீரர்களுக்கு சாணக்கியன் அஞ்சலி செய்திருக்கிறரே. பாராளுமன்றத்திலேயே இப்படி அஞ்சலி செலுத்துவதற்கு எத்தனை துணிவு வேண்டும். என்ன இருந்தாலும் அவர் துணிச்சலான ஆள்தான். அவரைப்போல மற்றையவர்களும் துணிச்சலுடன் இயங்கினால் நமது இனம் எங்கேயோ போய்விடும் அல்லவா?

**வியுக்தியார்:** அது என்ன எங்கேயோ போய்விடும்? இப்போது நமது இனத்தவர்களுக்கு எத்தனை அபாயகரமான பயணமாக இருந்தாலும் பரவாயில்லை, கனடாவுக்கோ அவுஸ்திரேலியாவுக்கோ தானே போகவேண்டும் என்ற ஆவல். அதைத்தனே எங்கோயோ என்று பூடகமாக சொல்கிறீர்கள். அதுசரி சாணக்கியன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியது, கோவிலுக்கு போய் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு கேட்பதுபோன்றதுதானோ தெரியவில்லை. கண்மூடித்தனமான யுத்தத்தை நடாத்தி ஆயிரக்கணக்கான மாவீரர்களை இல்லாமல் பண்ணிய மகிந்த ராஜபக்சவுடன் சேர்ந்து அரசியல் பண்ணிய பாவத்தை கழுவுகிறார் போலும். “கர்த்தரே நான் அறியாப்பருவத்தில் செய்த அந்த பாவங்களை மன்னித்தருளும்” என்று சொல்வதற்கு பதிலாக, மாவீரர்களிடமே பாவமன்னிப்பு கேட்டிருக்கிறார் அவ்வளவு தான். அதற்கு என்ன துணிவு தேவைாய் இருக்கின்றது?

---

**த.சிவசுதன், எமில்நகர். மன்னார்.**

**கேள்வி:** பாராளுமன்றத்தில் சாணக்கியனும் பிள்ளையானும் ஒருவரையொருவர் தனிப்பட்ட முறையில் தாக்குதல்களைத் தொடுத்தனர். அது அவர்களுக்கு அநாகரீகமாக தெரியவில்லையா?

**வியுக்தியார்:** இருவரும் ஒரே காலத்தில் ஒன்றாக அரசியல் செய்தவர்கள். அவர்களுக்குள் ஆயிரம் கொடுக்கல் வாங்கல்கள் இருக்கும். அதனை இருவரும் தீர்த்துக்கொள்கிறார்களோ என்னவோ? ஆனால் இடையில் புகுந்து நம்ம சுமந்திரன் “அவர்கள் லெவலுக்கு” இறங்கி தானும் கருத்துச்சொலியதுதான் சகிக்கமுடியவில்லை.

---

**து.பாஸ்கரன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**கேள்வி:** அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடுநிலைமை வகிப்பதாக கூறிக்கொண்டு வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறி விட்டது. இது அவர்களின் நல்ல ராஜதந்திர நகர்வுதானே?

**வியுக்தியார்:** பின்ன என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? அது இரகசிய வாக்கெடுப்பாக இருந்தால் எதிர்த்து வாக்களிக்கிறோம் என்று முடிவெடுத்துவிட்டு ஆதரித்தும் வாக்களித்திருக்கலாம். இது இரகசிய வாக்கெடுப்பு இல்லையே, அதுதான் அவர்கள் வாக்கெடுப்பை பகிஸ்கரித்தார்கள். இது அவர்களின் ராஜதந்திரம் என்றுதானே சொல்கிறீர்கள்?. ஆனால் பாராளுமன்றில் ஒரு விடயம் என்றால் ஆதரித்து வாக்களிக்கவேண்டும், இல்லையேல் எதிர்த்து வாக்களிக்கவேண்டும். அப்படி இல்லாமல் நடுநிலைமை வகிப்பது முதுகெலும்பு இல்லாதவர்களின் வேலை என்று சொன்னவர் சுமந்திரன். நமது எம்.பி.க்கள் எல்லோருடைய முதுகுகளையும் தடவிப் பார்க்கவேண்டும்.

---

**வி. நிரோஷ், சண்டிலிப்பாய், மானிப்பாய்.**

**கேள்வி:** அது என்ன திடீரென்று எல்லோரும் பதின்மூன்று பற்றி பேசத் தொடங்கியிருக்கின்றார்கள். பதின்மூன்றைப் பாதுகாப்பேன் என்று ஜனாதிபதி கூறுகிறார். பதின்மூன்றுக்கு உடன்படுகின்றேன் என்று மகிந்த ராஜபக்ச கூறுகிறார். தாங்களும் எப்போதும் பதின்மூன்றுக்கு ஆதரவு தான் என்று சஜித் பிரேமதாசாவும் கூறுகிறார். அப்படி எல்லோரும் கூறுவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** யாருக்காக பதின்மூன்று கொண்டு வரப்பட்டதோ அவர்கள் (நாம் தமிழர்கள் தான்) வேண்டாம் என்று சொல்லுவார்கள் என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் எல்லோரும் அதற்கு ஆதரவாக குரல்கொடுக்கிறார்கள். இனி என்ன இந்தியா மாத்திரமல்ல, சர்வதேசமே வந்தாலும், நாங்கள் கொடுக்க ரெடி ஆனால் அவர்கள் தான் வேண்டாம் என்கிறார்கள் என்று சொல்லலாம் என்றுதான் கணக்குப்போட்டிருக்கிறார்கள். ஆனால் நமது தலைவர்கள் அவர்களின் நம்பிக்கையில் மண்போட்டுவிடுவார்கள் போல இருக்கின்றது. பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

---

**எம். லோஜிதன், சிவன்கோவில் வீதி, செட்டிபாளையம்.**

**கேள்வி:** இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பதற்கு அரசுக்கு ஆணை இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுகின்றாரே. அவர் சொல்லது சரிதானே?

**வியுக்தியார்:** அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். அவர் இப்படிச் சொல்வது, நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை விற்கலாம் என்பது தானே. இதே மனுசன் தான் இந்த அரசாங்கம் மக்கள் ஆணையையே இழந்து விட்டது என்றும் கூறிக் கொண்டிருக்கிறார். அதுசரி நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை வாங்குவதற்கும் ஆட்கள் வரவேண்டுமே?

# ஊமைகளின் உலகம்...!

குரு அரவிந்தன்

அந்தப் பச்சிளம் உதடுகள் மார்பில் பட்ட போது தாய்மையின் பூரிப்பில் அவள் மெய்மறந்து போனாள். குழந்தையை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு கண்களை மெதுவாக மூடிக்கொண்டாலும் தாய்மையின் அந்த இதமான உணர்வின் வெளிப்பாட்டை அதிக நேரம் அவளால் அனுபவிக்க முடியவில்லை. பூப்போன்ற சின்னஞ் சிறிய அந்த உதடுகளின் தேடலில் அங்கே சுரப்பதற்கு எதுவுமில்லை என்று தெரிந்த போது குழந்தையின் 'வீல்' என்ற அந்த அலறல் சத்தம்தான் அவளது செவிகளில் முட்டி மோதி நின்றது.

வெறுமையின் தாக்கம் ஏற்படுத்திய குழந்தையின் ஆக்ரோசத்தவிப்பை அவளால் அப்போதுதான் முழுமையாக உணரமுடிந்தது. அதுவே அவளது உணர்வுகளின் பிரவாகமாய் ஒருகணம் அவளை உடைந்து போகவும் வைத்தது. அடுத்த கணமே அந்த உணர்வின் தாக்கம் ஏற்படுத்திய இயலாமையின் வெளிப்பாடாய் அந்தத் தாய் மனசு ஒவென்று விம்மி வெடித்தது. பொட்டென்று மார்பில் விழுந்து வழிந்த கண்ணீர் துளிகள் முகம் புதைத்து அழுத குழந்தையின் உதட்டில் படிந்த போது வாய்விட்டு வெளியே சொல்லத் தெரியாத அந்தப் பிஞ்சின் அலறல் கூட ஒரு கணம் தேங்கி நின்றது.

'அம்மா ஊட்டிய அமுதம் உப்புக் கரித்தது ஏன்?' என்று அந்தக் குழந்தைக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. குழந்தையைச் சமாதானம் செய்ய வாய் திறந்து 'ஆராரோ' சொல்லித் தாலாட்டுப் பாடக்கூட முடியாத சூழ்நிலைக் கைதியாய் அவள் மாறியிருந்தாள். வாய்திறந்தால் வெளியே உதிர்வது தமிழாக இருந்ததால்தான் அவள் இந்த மண்ணில் இப்படியான அவலநிலைக்குத் தள்ளப்பட்டாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் அது பற்றிச் சிந்திக்க இதுவல்ல நேரம் என்பதால் அது பற்றிய கவலைகளை தற்காலிகமாக அவள் ஒரு புறம் தள்ளி வைத்திருந்தாள்.

பசி கண்ணை இருட்டிக் காதை அடைத்தது. இப்படியான பசிக்கொடுமையை அவள் ஒரு போதும் அனுபவித்ததில்லை. கொடுமையிலும் கொடுமை பசிக் கொடுமை அதுவும் குழந்தைகள் பரிதவிப்பதைப் பார்த்தபோது தூக்கம் கெட்ட இரவாய் எப்போது விடியும் என்ற எதிர்பார்ப்புடையதாய் அந்த இரவு அவளுக்கு அமைந்திருந்தது. கடைசிக் குழந்தை வயிற்றில் இருக்கும் போதே அவளது கணவன் தொலைந்து போயிருந்தான். உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதுகூடத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் நாடு இருந்தது. அதனால் குழந்தைகளின் பசியைப் போக்க யாரிடமாவது கையேந்த வேண்டிய நிலைக்கு அவள் தள்ளப்பட்டிருந்தாள். அகதியாய் சொந்த மண்ணிலே புலம் பெயர்ந்து இங்கே வந்தபோது, படித்திருந்தும் வயிற்றுப் பிழைப்புக்காக அரிசி ஆலை ஒன்றில் கூலி வேலைதான் அவள் செய்தாள்.

இலங்கைத் தீவில் பெரும்பான்மை இனமக்கள் மட்டும் சந்தோஷமாய்க் காலம் களிக்க வடக்கு கிழக்கு, மலைநாடுகளில் வாழ்ந்த சிறுபான்மை இனமான தமிழர்கள் மட்டுமே அரசியல் லாபம் தேடியவர்களால் தினந்தினம், அல்லற்படுத்தப்பட்டு அழுதழுதே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அடிப்படை உரிமைகளை வாய்திறந்து கேட்டதுதான் அவர்கள் செய்த மிகப்பெரிய குற்றமாகக் கணிக்கப்பட்டது. அகிம்சை முறையில் போராடிய தமிழ் அரசியல் வாதிகள் அதனால் பலன் எதுவும் இல்லாமல் போகவே தாமாகவே ஒதுங்கிப் போய் விட இளைஞர்கள் அந்தப் போராட்டத்தை முன் எடுத்தார்கள். அரசியல் வாதிகள் யாருமே தமிழர்களின் குறைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளவோ அல்லது அதன் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவோ மறுத்து விட்டார்கள் அல்லது மறந்து விட்டார்கள். அடங்கிப்போ என்ற கர்வத்தோடு அடக்கி ஆள்வதையே ஜனநாயகம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்த, பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு பிரிந்து போவது என்பது அத்தனை இலகுவான காரியமாய் தமிழர்களுக்கு இருக்கவில்லை. அதில் உள்ள வேதனையும் வலியும் மற்றவர்களுக்கு இலகுவில் புரிவதுமில்லை. திடீரென அவர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிப்பு வந்த போது இவர்கள் செய்வதறியாது குழம்பிப் போனார்கள். பாதுகாப்பு வலயம் என்று சொல்லி அவர்கள் ஏற்படுத்திய தடுப்பு முகாமுக்குள் போய் இவர்கள் முடங்க வேண்டிவந்தது. திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு ஒதுங்க ஒரு மரநிழலும் குடிக்கத் தண்ணீரும் ஒருநேரம் அரை வயிறுக்கு ஏதாவது தின்னக் கொடுத்தால் போதும் என்ற நினைப்புத் தான் அரசியல்வாதிகளுக்கு இருந்தது. இதுதான் மனிதவாழ்க்கை என்றால் அடிமை வாழ்க்கை வாழ்வதற்கு ஜனநாயகம் என்ற போர்வை எதற்கு என்பது பாதிக்கப்பட்ட இவர்களின் வினாவாக இருந்தது.

பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு முகாமுக்குச் சென்ற இளம் பெண்கள் களவாடப் படுகிறார்கள், ஆண்கள் தொலைந்து போகிறார்கள் குழந்தைகளும் சிறுவர்களும் தனிமைப் படுத்தப் படுகிறார்கள் என்றெல்லாம் இவள் தங்கியிருந்த பகுதியில் தினமும் செய்திகள் அடிபட்டுக் கொண்டே இருந்தன. வன்னிப்பகுதிக்குச் சென்றால் உயிருக்கு ஆபத்து தொலைந்துகூடப் போகலாம் என்று சொல்லி, பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டதால் எல்லாச் செய்திகளும் வேண்டும் என்றே முடக்கப் பட்டுவிட்டன. யார் தவறு செய்தாலும் தவறுதான் என்பதை வெளியே சொல்ல நல்ல மனம் படைத்த மனிதாபிமானிகள் கூடப் பயப்படுகிறார்கள். அப்படிச் சொல்ல வந்த ஒரு சில பத்திரிகை ஆசிரியர்கள் முகவரி இல்லாமற் போன தும் கூட இவர்கள் பயப்படுவதற்கான முக்கிய காரணமாய் இருக்கலாம்.



தூக்கம் கலைந்த நிலையில் பசிக் கொடுமையை எப்படிப் போக்கலாம் என்று எண்ணியபோது அவள் முன்பு கூலி வேலை செய்த அரிசி குத்தும் ஆலையின் நினைவு வந்தது. சுமார் இரண்டு மைல் தூரத்திற்கப்பால் அந்த ஆலை இருந்தது. எட்டி நடந்தால் விரைவாக ஒருநடை போய் வரலாம் என்று நினைத்தாள். குழந்தைகள் இருவரும் இன்னமும் தூங்கின படியே இருந்தனர். இரவிரவாய் அழுததில் ஏற்பட்ட பசிக் களைப்பாக இருக்கலாம்.

குழந்தைகள் எழுந்திருக்கு முன்பாக வந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு சுளகையும் (முறம்) எடுத்துக் கொண்டு ஒட்டமும் நடையுமாய்ச் சென்றாள். முதலாளியிடம் கேட்டுப்பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு சென்றவளுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தொழில் இல்லாத காரணத்தால் அரிசி ஆலை இழுத்து மூடப்பட்டிருந்தது. மூடப்பட்டுப் பல நாட்களாகி இருக்கலாம். கட்டிடத்தின் வெளிப்பகுதியில் அள்ளிக் குவிக்கப்பட்ட உமிக் குவியல் மட்டும் இவள் கண்களில் பட்டது. அவசரமாக கொஞ்ச உமியைக் கிளறிச் சுளகில் எடுத்துப் போட்டுக் கைகளால் பரப்பிப் பார்த்தாள். ஏதோ ஒருவித நம்பிக்கையின் பிடிப்பு அவளது கண்களில் பளிச்சென்று தெரிந்தது.

ஒவ்வொரு முறையும் உமியை அள்ளிப் போட்டுப் புடைக்கும் போது அவள் தேடிவந்தது கிடைக்கிறதா என்று ஆவலோடு தேடிப்பார்த்தாள். சப்பி நெற்கள்தான் அதிகமாக அகப்பட்டாலும் அவற்றைத் தவிர்த்துப் பார்த்த போது நாலைந்து நல்ல நெல்லுப் பருக்கைகளும் அவளது கையில் ஒவ்வொரு முறையும் அகப்பட்டன. அரை மணி நேரம் செலவிட்டதில் ஒரு சிறங்கை நல்ல நெற்கள் கிடைத்தன. கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் குடிக்கவாவது கொஞ்ச அரிசி கிடைத்தால் போதும் என்ற வெறியோடு அவள் துரிதமாகச் செயற்பட்டாள்.

எந்த நேரமும் வானத்தில் குண்டு வீச்சு விமானத்தின் இரைச்சல் கேட்கலாம். திக்குத் திசை தெரியாமல் செல்கூட அங்கே வந்து விழலாம். எதையுமே கணித்துச் சொல்லமுடியாத நிலையில் மயான சூழ்நிலையில் அந்தப் பிரதேசம் இருந்தது. பறவைகளின் கூடுகள்கூடக் கலைக்கப்பட்டதில் அவற்றின் ஓசை அடங்கிப் போயிருந்தது. செல்விழுந்து எரிந்து போன மரங்களும் குடிசைகளும் மனித உடல்களும் ஆங்காங்கே தினமும் காணும் காட்சியாய்ப் போய்விட்டது.

வியர்வையில் தோய்ந்த உடம்பு பிசுபிசுத்தது. அவ்வப்போது சேலைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்தாள். வெய்யில் உச்சியைத் தொட்ட போது ஐந்தாறு சிறங்கை நெல்மணிகளை கவனமாக எடுத்துப் பொன்னைப்போல மடியில் சேகரித்திருந்தாள். அதைக் கொண்டு போய் மெல்ல நெரித்து அரிசிப் பருக்கைகளாக்கி அவற்றைப் பொறுக்கிக் குழந்தைகளுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வழியிலே நின்ற சண்டி மரத்து இலைகள் சிலவற்றையும் அவசரமாகப் பறித்துக் கொண்டு அவள் தங்கியிருந்த இடம் நோக்கி விறுவிறு என்று நடந்தாள்.

என்றோ ஒருநாள் உதயம் தோன்றும் குழந்தைகளை நன்றாய்ப் படிக்கவைத்து அவர்களை நல்ல பிரசைகள் ஆக்க வேண்டும் என்ற ஒரு தாயின் தீராத கனவுகளைச் சுமந்தவண்ணம் அவள் நம்பிக்கையோடு நடந்தாள்.

அடிப்படைத் தேவைக்கான உணவுப் பொருட்கள் இந்தியாவில் இருந்து கப்பலில் வருவதாகச் சொன்னார்களே தவிர அங்கே எதுவும் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்திருந்தாலும் தடுக்கப்பட்டிருக்கலாம். வன்னிப் பகுதியில் போர் உக்கிரமடைந்திருந்தது.

ஒருநேர உணவிற்காகக் காத்திருந்து காத்திருந்து ஏமாற்றம் தாங்கமுடியாமற் போனதில் அவளுக்குள் ஒருவித சோர்வும் சலிப்பும் குடிகொண்டது. இராணுவம் நன்கு திட்ட மிட்டு உரிமைக்காகப் போராடியவர்களைப் பட்டினி போட்டால் அதைக் கைவிட்டு உண வுக்காகப் போராடுவார்கள் என்ற வஞ்சக நோக்கத்தோடு செயற்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களின் வஞ்சக வலையில் வீழ்ந்ததால் உரிமையை மறந்து உணவிற்காகப் போராட வேண்டிய நிலைக்கு அந்த அப்பாவி மக்கள் தள்ளப்பட்டார்கள். அதனால்தான் இன்று இப்படியான மனித அவலத்தை அவர்கள் எதிர்நோக்க வேண்டி வந்தது.

சண்டி மரத்து இலையையோடு சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் குழந்தைகளுக்குக் கொடுத்து தானும் மிகுதியை அருந்தியதில் சற்றுத் தெம்பாக இருப்பது போலத் தெரிந்தது. நம்பிக்கைகள் உடைந்து போன தருணத்தில் அதுவே அவர்கள் உயிர்வாழ வழிகாட்டுவதாயும் இருந்தது. எனவே மறுநாள் காலையில் மீண்டும் எதிர்பார்ப்போடு அவள் அரிசி ஆலை நோக்கி நடந்தாள். அரிசி ஆலைக்கு அருகே சென்றபோது அவளது எண்ணத்தில் இடி விழுந்தது போல அங்கே கண்ட காட்சி இருந்தது. எரி குண்டுகள் பல அங்கே வந்து விழுந்து வெடித்ததில் அந்த நெல் குத்தும் ஆலையும் அதன் பின்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்த உமி மேடும் சாம்பலாய்ப் போயிருந்தன. சில நாட்களாவது உயிர் வாழலாம் என்ற அவளது கடைசி நம்பிக்கையும் கண்முன்னால் சாம்பலாகிப் போயிருந்தது.

குழந்தைகள் பசியால் மீண்டும் வாடப்போகிறதே என்ற கவலையில் ஏமாற்றத்தோடு தங்கி இருந்த இடம் நோக்கி வேகமாகத் திரும்பியவளுக்கு இன்னும் அதிர்ச்சி காத்திருந்தது. இவள் தங்கியிருந்த பகுதியில் இருந்து வந்த ஒப்பாரி ஓசை தூரத்தில் வரும்போதே இவள் செவிகளைத் தொட்டு உறைய வைப்பதாய் இருந்தது. என்னவோ ஏதோ என்ற பதட்டத்தோடு ஓட்டமும் நடையுமாய் வந்தாள். இரத்தம் உறைந்த அவளது குழந்தைகளின் ஆடைகள்தான் அங்காங்கே சிதறிக் கிடந்தன. சிதறல்களைப் பார்த்த வினாடியே அதைத் தாங்க முடியாத அதிர்ச்சியில் அவள் அப்படியே உணர்வற்று விழுந்து போனாள்.

குழந்தைகளுக்காக உணவு தேடி அலையும் ஒரு அபலைத்தாயின் அலைச்சலைக்கூடப் பொறுக்க முடியாத ஆண்டவன் அவளுக்குக் கருணை செய்ய நினைத்திருக்கலாம். அதனால்தான் அவளைக் கேட்காமலே அவளது குழந்தைகளைத் தன்னிடம் தத்து எடுத்துக் கொண்டிருக்கலாம். விதியே விதியே என்செய்தாய் என்று விதிமீது பழிபோட்டு எல்லோரும் கண்மூடி மௌனம் காக்க,

அவளைப்போல பல பெண்கள் அந்த மண்ணில் சிறைப்பிடிக்கப்பட்டு முகாமில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட, ஆடைகளையும் துச்சாதன மிருகங்களுக்கு மத்தியில் துணையற்ற அவளும் தனிமரமாய்.. வலியும் வேதனையும் சுமந்த கண்கள் குளமாக வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் எதையுமே வெளியே சொல்ல முடியாத ஊமைகளாய்.. துப்பாக்கி ரவைகளுக்கு இரைகளாய், முடிவு தெரியாத பயணத்தில் தொலைந்து போனவர்களாய், இன்னும் எவ்வளவு காலம்?

# மனிதகுலத்திற்கு எதிரான டாவூர் இனப்படுகொலை:

## தீராத் துயரத்துடன் டாவூர் இனமக்கள் குருதி வழிந்த ஓர் தேசத்தின் வரலாறு

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

வட சூடானின் ஒடுக்கு முறையின் உச்சக்கட்டமாக சூடானின் டாவூர் (Darfur) மாகாணத்தில் கொடூரமான இனப்படுகொலைகள் 2003 இல் நிகழ்ந்தது. ஆனால் இது தொடர்பான தகவல்கள் மிகவும் காலம் கடந்தே உலகுக்குத் தெரிய வந்தது.

டாவூர் இனப்படுகொலை என்பது மேற்கு சூடானில் நடந்த மோதலின் போது நிகழ்ந்த டாவூர் இன மக்களை திட்டமிட்ட முறையில் கொலை செய்யப்பட்டதாகும்.

டாவூர் மாநிலத்தில் இதுகாலவரை சுமார் 2 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இரண்டு போராளிக் குழுக்கள் டாவூர் இன மக்கள் திட்டமிட்ட புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுவதாகக் குற்றம் சாட்டி சூடானுக்கு எதிராகத் தாக்குதலை தொடுத்தார்கள்.

சூடான் பதில் தாக்குதல் தொடுத்தது. சூடானிய வான்படை வான் தாக்குதலை நடத்தியது. சூடான் இராணுவம் அராபு ஜன்ஜாவீட் ஆயுதக் குழுவுக்கு ஆயுதங்கள் வழங்கியது. இரு குழுக்களுக்கும் இடையிலான சண்டை இரண்டரை ஆண்டுகள் வரை நீடித்தது.

டாவூர் இனப்படுகொலை தொடர்பாக பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் சூடான் ஆட்சித்தலைவர் உமர் அல் பசீருக்கு பிடியாணை பிறப்பித்தது. அராபிய நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் அவர் கைது செய்யப்படுவதற்கோ பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் கையளிப்பதற்கோ அப்போது விரும்பவில்லை.

**21 ஆம் நூற்றாண்டின் கோர இனப்படுகொலை:**

இது 21 ஆம் நூற்றாண்டின் கொடூர இனப்படுகொலை என்று அறியப்பட்டது. ஃபர், மசலித் மற்றும் ஜகாவா பழங்குடியினருக்கு எதிராக நடத்தப்படும் இந்த இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், கற்பழிப்பு, கட்டாய இடமாற்றம் மற்றும் சித்திரவதை போன்ற குற்றங்களுக்காக பலரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐசிசி) வழிநடத்தியது.

ஐநா கூற்றுப்படி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர், கற்பழிக்கப்பட்டுள்ளனர், காயமடைந்துள்ளனர், இடம் பெயர்ந்துள்ளனர், அதிர்ச்சியடைந்துள்ளனர் அல்லது பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களின் இழப்பைச் சகித்துள்ளனர்.

**சூடான் விடுதலை இயக்கம் தாக்குதல்**

கார்டூம் தேசிய அரசுக்கும் டாவூரில் உள்ள இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரால், நீதி மற்றும் சமத்துவ இயக்கம் மற்றும் சூடான் விடுதலை இயக்கம் கிளர்ச்சிக் குழுக்கள் ஆரம்பத்தில் பிப்ரவரி 2003 இல் டாவூர்ன் “கார்டூமின் அரசியல் மற்றும் பொருளாதார ஓரங்கட்டல்” காரணமாக உருவாக்கப்பட்டன.

ஏப்ரல் 2003 இல், கிளர்ச்சிக் குழுக்கள் இராணுவ விமானநிலையத்தைத் தாக்கி, ஒரு விமானப்படை ஜெனரலைக் கடத்திச் சென்றபோது, அரசாங்கம் எதிர் தாக்குதலைத் தொடங்கியது.




இது கார்ட்டூம் அரசாங்கத்தின் பதிலுக்கு வழிவகுத்தது, அங்கு அவர்கள் கிளர்ச்சியில் போராளிப் படைகளை ஆயுதம் ஏந்தினர். இதன் விளைவாக சூடானிய அரசால் டாவூர்ல் குடிமக்கள் மீது பாரிய வன்முறை ஏற்பட்டது.

1956 இல் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து சூடான் சுதந்திரம் பெற்றதில் இருந்து கிறிஸ்தவர்கள், கறுப்பின தெற்கு மக்கள் மற்றும் அரபு ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கத்திற்கு இடையே ஏற்பட்ட உள்நாட்டுப் போர் சுமார் 11 ஆண்டுகளாக நடந்த வன்முறை ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை அழித்துச் சென்றது. பகைமையால் இடம்பெயர்ந்தவர்களும், சூடானைச் சுற்றியுள்ள பிற இடங்களுக்கு அல்லது எல்லையைத் தாண்டி சாட் நாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளனர்.

**கறுப்பின வம்சாவளி மீதான வன்முறை**

டாவூரில் ஆறு மில்லியன் மக்கள் பழங்குடியினர் வசிக்கின்றனர். டாவூர்




இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது: கறுப்பின ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், அரபு வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவர். சூடானில் பல ஆயிரக்கணக்கான கருப்பினத்தவர் ஆயுதம் தாங்கிய அர புக் கொலை வெறியர் கும்பல்களால் (ஜஞ்ஜாவீது என அழைக்கப்படும் கும்பல்கள் இவை) படுகொலை செய் யப்பட்டுள்ளதோடு, பெண்களின் மீது பாலியல் வன்முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கிராமம் கிராமமாகத் திட்டமிடப்பட்ட வகையில் கருப்பினத்தவரின் வீடுகளும், கால்நடைகளும், பிற உடமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. பல லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து ஓடிப் போய் அகதி முகாம்களிலும், நாட்டை விட்டே வெளியேறி அண்டை நாடான சாடிலும் தஞ்சம் புகுந்து உள்ளனர்.

**சூடானின் அரபு ஆதிக்கம்:**

சவுதி அரேபியாவிலிருந்து உலகையே பீடிக்கும் வஹாபி வழி இஸ்லாமியத் தீவிர வாதம்- அரபு இனவாதம் மேலும் அரபு ஏகாதிபத்திய சிந்தனைப் போக்கே இப்பிரச்சினையின் மூல காரணம் ஆகும். படை எடுத்து வந்த அரபு போர் வெறியர்கள் கண்ணில் படும் ஆப்பிரிக்க இனச் சூடானியரை உடனடியாகக் கொன்று குவித்தனர்.

2013 இல், ஐக்கிய நாடுகள் சபை டாவூர் இனப்படுகொலையின் போது 300,000 பேர் வரை கொல்லப்பட்டதாக மதிப்பிட்டுள்ளது. பதிலுக்கு, சூடான் அரசாங்கம் இறப்பு எண்ணிக்கை “அதி மொத்தமாக உயர்த்தப்பட்டது” என்று கூறியது. 2015 இல், இறப்பு எண்ணிக்கை 100,000 முதல் 400,000 வரை இருந்ததாக மதிப்பிடப்பட்டது.

2016 ஆம் ஆண்டு வரை வன்முறை தொடர்ந்தது, அங்கு டாவூரில் உள்ள உள்ளூர் மக்களுக்கு எதிராக அரசாங்கம் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த விரோதமான சூழல் காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். மோதலால் 3 மில்லியனுக்கும் அதிகமான உயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

**டாவூரில் போர்க் குற்றவாளி தீர்ப்பு:**

2003 ஆம் ஆண்டில் இருந்து 3,00,000 டாவூர் இன மக்கள் கொல்லப்பட்டனர். சூடான் அதிபர் ஒமர் அல் பசீரின் திட்டமிட்ட படுகொலைக்குப் பல்வேறு ஆதாரங்கள் திரட்டப்பட்டுப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பாலியல் வன்கொடுமை, சித்திரவதை, கட்டாய இடப்பெயர்வு ஆகிய குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் அல் பசீரை ஒரு போர்க் குற்றவாளி என்று பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**ஐக்கிய நாடுகள் சபை - சர்வதேச தலையீடு**

டாவூரில் அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை ஒரு கலப்பின ஐக்கிய நாடுகளின்-ஆப்பிரிக்க யூனியன் பணியை அமைத்தது. இது 31 ஜூலை 2007 இல் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்துடன் நிறுவப்பட்டது. இருப்பினும், அது முறையாக 31 டிசம்பர் 2007 அன்று பொறுப்பேற்றது.

ஆரம்பத்தில் முன்னைய சூடான் அதிபர் பஷீரின் குற்றப்பத்திரிகையில் இனப்படுகொலை குற்றச்சாட்டை சேர்க்க சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரண (ஐசிசி) செய்ய மறுத்தது.

இருப்பினும், மேல்முறையீட்டைத் தொடர்ந்து இந்த முடிவு ரத்து செய்யப்பட்டது. மூன்று இனப்படு கொலைகளுக்கு சூடான் அதிபரே பொறுப்பு என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக விசாரணை மூலம் கண்டறிந்தது.

14 ஜூலை 2009 அன்று, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காகவும், டாவூரில் இனப்படுகொலைக்கு வழிவகுத்ததற்காகவும், உத்தரவிட்டதற்காகவும் சூடானின் ஜனாதிபதி ஒமர் பஷீருக்கு ஐசிசி குற்றப்பத்திரிகையை வெளியிட்டது.

12 ஜூலை 2010 அன்று, இனப்படுகொலைக்காக அல்-பஷீரை கைது செய்ததற்காக ஐசிசி இரண்டாவது குற்றப் பத்திரிகையையும் வெளியிட்டது.

பஷீரைத் தவிர மற்றும் ஆறு சந்தேக நபர்கள் நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர், அஹ்மத் ஹாரூன், அலி குஷைப், பஹர் அபு கர்தா, அப்துல்லா பண்டா, சலே ஜெர்போ, அப்தெல் ரஹீம் முகமது ஹூசைன், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவரும் இதுவரை கைது செய்து காவலில் வைக்கப்படவில்லை.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த ஐசிசியின் வழக்கறிஞர் லூயிஸ் மோரேனோ-ஒகாம்போ, இனப்படுகொலை கற்பழிப்பு குற்றச்சாட்டையும் தனது விண்ணப்பத்தில் தொடர்ந்தார்.

ஆகஸ்ட் 19, 2019 - பஷீர் தனது ஊழல் வழக்கு விசாரணையின் பின் அவரை சிறையில் இருந்து உடைக்க அவரது ஆதரவாளர்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அவருக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை டிசம்பர் 14, 2019 - ஊழல் மற்றும் சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தை வைத்திருந்ததற்காக பஷீருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட் டது.

சூடானின் அரசாங்கம் பஷீரை, மேலும் டாவூர் மோதலில் தேடப்படும் மற்ற அதிகாரிகளுடன் ஐசிசியிடம் ஒப்படைப்பதாக ஆகஸ்ட் 11, 2021 இல் அறிவித்தது.




மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலையை எதிர்கொண்ட டாவூர் இன மக்கள் இன்னமும் தீராத் துயரத்துடனேயே வாழ்கின்றனர். இன்னமும் டாவூர் இனமக்களின் வலிகள், வரலாற்றின் வரிகளில் குருதி கசியும் வண்ணமாய் உள்ளது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C  2) E  3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16  2) 15  3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்  2) நிஷான்  3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13  2) 14  3) 15


27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்  2) செவ்வகம்  3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm  2) 18cm  3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3  2) 2  3) 4

31. 


ஆகுமெனில் 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14  2) 10  3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ  2) ஆ  3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்  2) 3 தடவைகள்  3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள்  2) 5 தடவைகள்  3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2  2) 3  3) 4

## விடைகள்

24. 2  28. 2  32. 1
25. 3  29. 2  33. 1
26. 1  30. 3  34. 2
27. 2  31. 1  35. 1

### கல்வி tv CHANNEL-1

**27.11.2022 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**27.11.2022 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கடனாளிகள் விரைந்து பதிலளிக்காதுவிடின் மில்லியன் கணக்கானோருக்கு உயிராபத்து!

## மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 27

**இலங்கையின் கடன் மறு சீரமைப்புக்கு கடனாளிகள் விரைவாக பதிலளிக்காதுவிட்டால், இலங்கையில் மில்லியன்கணக்கான உயிர்கள் ஆபத்தில் இருக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டின் பொருளாதார உறுதித்தன்மைக்காக கடனை மறுசீரமைக்க கடன் வழங்குநர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அப்போது அனைத்துலக நாணய நிதியம் மற்றும் பிற அனைத்துலக அமைப்புக்களின் ஆதரவைப் பெற முடியும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலின் அடிப்படையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அனைத்துலக நாட்டின் பங்காளிகள் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுமாறு வற்புறுத்தவேண்டும்.

இலங்கை, சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பிரதான கடன் வழங்குநர்கள் கடன் மறு சீரமைப்பை ஆதரிப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து எழும் மனித உரிமை மீறல்களை அவசரமாக குறைக்கவேண்டும் என்று அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மாவீரர் வாரத்தில்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பிற்காக, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்ததாக கூறப்பட்டிருந்த நிலையில், அந்த அழைப்பை, தமிழ்த் தேசியக் கட்சிகள் புறக்கணித்தன.

இதில் என்ன விடயம் என்றால், கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் அந்த சந்திப்பு இடம்பெற ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அன்றையதினம் பகல்பொழுதில் ஐ.நா விசேட பிரதிநிதிகள் குழுவினரை கூட்டமைப்பின் சார்பில் சந்தித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் அமைப்புக்களின் தலைவர்கள், இரா. சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றிருந்த கூட்டத்திற்குச் சமூகமளித்திருக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அரசியல் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தபோது கூட்டம் இடம்பெறுவதாக தமக்கு முதல்நாளே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் தொடர்புகொண்டு கூட்டத்திற்குச் செல்கிறீர்களா என தான் வினவியபோது அவர்கள் உரிய முறையில் தமக்கு அழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்திருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின்னர்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாவை சேனாதிராசாவின் ஏற்பாட்டில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கு, உத்தியோகபூர்வ அழைப்பு வழங்கப்பட்டமைக்கு அமைய, நேற்று முன்தினம் இரவு, இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், எஸ். வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நேற்று முன்தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்றிருக்காத நிலையில், ஏன் அந்தக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என, கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர் மாவை சேனாதிராசாவிடம் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், வரும் வாரம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்திற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினரை முறைப்படி அழைக்கவும், இது குறித்து நாளை 28ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பேசவுள்ளதாகவும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்த இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கலையரசன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை.

கடந்த 24ஆம் திகதி கொழும்பில் நடந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்தில், இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளலாம் என, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்போதிலும், குறித்த மூவரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஏற்கனவே மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில்தான் கலந்து கொள்ள வேண்டியிருந்த காரணத்தினால், உரிய முறையில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு தகவலளித்த பின்னரே தான் கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கவில்லை என்றும், கூட்டமைப்பின் முடிவே தமது முடிவாக இருப்பதனால், கூட்டமைப்பின் தலைவர் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் தான் அன்றையதினம் அவசியம் பேசவேண்டிய நிலை இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வொன்றில் கலந்துகொண்ட காரணத்தினால் தன்னால் கூட்டத்தில் பங்கேற்றிருக்க முடியவில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் தான் இருந்த காரணத்தினால் தன்னால் இச்சந்திப்பில் பங்கேற்றிருக்க முடியவில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டார்.

எது எவ்வாறு இருப்பினும் தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசாங்கத்துடன் என்ன விடயங்களைப் பேசுவது என ஆராயும்

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இரண்டாவது சந்திப்பு வரும் வாரம் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியின் தமிழர் தீர்வுக்கான அழைப்பைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி, அரச தரப்பின் இரு வேறு அணியினர் எனப் பலரும் இதற்கான தமது இணக்கத்தை வெளியிட்டிருக்கும் நிலையில், தமிழ்த் தரப்புக்கள் இந்த விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கலாம். •

# பாடசாலை மாணவர்கள் இடையே போதைப்பொருள் பாவனை உச்சம்

கொழும்பு, நவ. 27

பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருவதாக தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறு கையில்-

குழந்தைகளின் செயற்பாடுகளில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஐஸ் ஹெரோயின் மற்றும் புகையிலை தொடர்பான பொருட்களைப் பயன்படுத்துவது பாடசாலை மாணவர்களிடையே ஒரு போக்காக மாறியுள்ளது.

மன நோய் மருந்துகளாகப் பயன்படுத்தும் சில மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவது ஒரு போக்காக மாறிவிட்டது.

போதைப்பொருள் பாவனையால் எதற்கும் தீர்வு கிடைக்காது. ஆனால் அது தற்போதுள்ள பிரச்னைகளை அதிகரிக்கவும் புதியவற்றை உருவாக்கவும் உதவும் - என்றார். (அ)

# ஓர் அப்பனுக்கு...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளைப் பறிகொடுத்தோம். அன்று காலை ஈழநாதத்தைச் சேர்ந்த எல்லைப் படை வீரனான சுகந்தன் முதலானோரின் வீரவணக்க நிகழ்வு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட ஒரு போராளி இரட்டைவாய்க்கால் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் கடைசி வித்துடல்கள் இவை. இன்றிருக்கும் நிலை நாளை இராது. போக்குவரத்தை தடை செய்யக்கூடும் இராணுவம் என்றார். இவளது வித்துடலை கொண்டுவந்த ராஜன் கல்விப் பிரிவினரிடம் மேற்குறித்த விடயத்தை சொன்னேன்.

கரும்புலியாகப் போகும் இவளது விருப்பம் ஏற்கப்படவில்லை என அவர்கள் கூறினார்கள். "நான் மட்டும் புதிய துயிலும் இல்லத்துக்கு வருகிறேன். ஒழுங்கு செய்ததும் எனக்கு அறிவியுங்கள்", என்றேன். சம்மதித்தார்கள். பகல் வரை அவர்கள் வரவில்லை. எனவே, வித்துடல்களை அடுக்கி வைத்திருக்கும் இடத்துக்குப் போனேன். அங்கிருந்து இவளது வித்துடலைக் கொண்டு போய் விட்டார்கள் என்றனர். புதிய இடம் எது வென்று எவருக்கும் தெரியாது. வித்துடலுக்கு மண் போடும் பாக்கி யம்கூட எனக்குக் கிடைக்க வில்லை. அன்றைய கள நிலைமை அப்படி. சில நாள் கழித்து கலை பண்பாட்டுக் கழகத்திலிருந்த கனெக்ஸின் (கனகரத்தினம்) வித்துடல் விதைக்கப்படும் என்று ஓரிடத்தை குறிப்புச் சொன்னார்கள். அங்கு போன போதுதான் இவள் விதைக்கப்பட்ட இடத் தில் பெயர் பலகை இருந்தது. அந்த இடத்தில்தான் தற் போது மாவீரர் நாளில் மலர்தூவி அஞ்சலிக்கிறோம். •

**உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்**

துயர் .நெற்
THUYAR.NET

**துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்**

ஈழநாடு
Eelanadu

**ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்**
**யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்**

DAN NEWS

**டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்**

விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

## மாவீரர் நாள்...

துயிலும் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கின்றன.

இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சம நேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 15 க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனைவரையும் அணிதிரண்டு வருமாறும் அந்தந்தத் துயிலும் இல்லங்களின் பணிக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 5 இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று மாலை 6.05 மணிக்குப் பொதுச் சுடர், நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி முன்மாரி துயிலும் இல்லம், தாண்டியடி துயிலும் இல்லம், தரவை துயிலும் இல்லம், வாகரை கண்டலடி துயிலும் இல்லம் என நான்கு துயிலும் இல்லங்கள் உள்ளன.

இந்த நான்கு துயிலும் இல்லங்களில் தாண்டியடி துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் உள்ளதால் தாண்டியடி சந்தியில் உள்ள பிரத்தியேக இடத்திலும், ஏனைய மூன்று துயிலும் இல்லங்களில் அதே துயிலும் இல்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சி குடிச்சாறு துயிலும் இல்லத்தில் அம்பாறை மாவட்ட எமது மக்கள் கலந்து கொள்ளலாம்-என்றார்.

தாயக விடுதலைக்காகத் தங்களது இன்னுயிர்களை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களை நினைவுகூர்ந்து வருடந்தோறும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இந்த வருடமும் மாவீரர் நாளுக்கான நினைவேந்தல் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தமிழர் தாயகத்தில் அரச படைகளின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் இடம்பெற்றுள்ளன.

உறவுகளின் போக்குவரத்து வசதி கருதி போக்குவரத்து வசதிகளும் மாவீரர் துயிலும் இல்லங்களின் பணிக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நிகழ்வு இன்று புலம்பெயர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது. (அ)

## ரணிலுக்கு...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பில் 121 வாக்குகளைப் பெற்ற அரசாங்கம் 37 மேலதிக வாக்குகளால் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்த வாக்குகளை பகுப்பாய்வு செய்தால், அரசாங்கத்தின் புகழ் குறைகின்றது அல்லது குறைவடைந்து வருகின்றது என்பதைக் காட்டுகின்றது.

ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலில் ரணில் 134 வாக்குகளைப் பெற்றார். இம்முறை அவரது வரவு-செலவுத் திட்டத்தில் அவருக்கு அப்போது கிடைத்ததைவிட 13 வாக்குகள் குறைவு.

வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக 84 வாக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளதால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அண்மித்த அரசாங்கத்தின் வாக்குகள் தற்போது 29 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிகின்றது.

ரணிலின் வரவு-செலவுத் திட்டத்தினால் மக்கள் மீது சுமத்தப்பட்ட வரிகள் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வந்து அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும்போது எதிர்காலத்தில் 29 வாக்குகள் ஒரு பகுதியினால் குறையுமா என்பது தெரியவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் அவருக்கு குறைவாக கிடைத்த 13 வாக்குகளில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 வாக்குகளும், விக்னேஸ்வரன் எம்.பியின் வாக்கும் உள்ளடக்கம். (அ)

## பட்ஜெட்டால்...

வரவு-செலவுத் திட்டத்தில் உப்பு நீர் மீன்பிடித் தொழிலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. நன்னீர் மீன்களை வளர்ப்பதற்குப் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் நாடு முழுவதிலும் உள்ள பெரும்பான்மையான கடற்தொழிலாளர்களுக்கு ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை"என வடமாகாண கடற்தொழிலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரும், மன்னார் மாவட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்லைத் தாண்டி வந்து நாட்டின் கடல் வளங்களை கொள்ளையடிக்கும் இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல், எரிபொருள் விலையேற்றம், எரிபொருளை கடற்தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான உரிய விநியோகமுறை இன்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பிடிபட்ட மீன்களை சந்தைப் படுத்துவதில் உள்ள சிரமங்கள் ஆகிய காரணங்களால் மீன்பிடி தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த அரசிடம் எந்த திட்டமும் இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்தின்போது மன்னாருக்கு சென்ற சமயத்தில், வடமாகாண கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்காமை கவலை தருகிறது.

இந்திய கடற்தொழிலாளர் வந்து எங்கள் கடலை நாசம் செய்வதை யாரிடம் சொல்வது? மக்கள் நலனை தேடிப் பார்க்கின்றார்கள் எனின் மக்களைச் சந்திக்க ஏன் அச்சம்?

ஜனாதிபதியின் மன்னார் விஜயமானது மக்களின் பிரச்னைகளை ஆராய்வதை விட இங்குள்ள வளங்களை அரசாங்கம் எவ்வாறு பெற முடியும்? அல்லது யாருக்காவது எப்படி இதனை விற்பனை செய்ய முடியும் என்பதை ஆராயும் வகையிலேயே அமைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் இதே சிந்தனையுடனேயே நடுக்குடா பகுதிக்கு வந்ததாகவும், ஆனால் சில நாட்களில் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பினால் நாட்டை விட்டு வெளியேற நேரிட்டது-என்றார். (அ)

## அடுத்த...

திட்டம் இருப்பதாகவும் அதற்கான பிரசார வேலைத்திட்டத்தை அவர் ஏற்கனவே தொடங்கியுள்ளார் எனவும் அவர் கூறினார்.

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் "துலாவ" அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

# அரச ஊழியர் ஆடைக்கட்டுப்பாடு; அடுத்த வாரம் புதிய சுற்றறிக்கை!

அரச ஊழியர்களின் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவர் இதனை கூறினார்.

இதேவேளை, அடுத்த வாரம் முதல், அனைத்து அரசாங்க அதிகாரிகளும், நிறுவனத்தின் கொள்கைகளின்படி பரிந்துரைக்கப்பட்ட ஆடைக் குறியீட்டின்படி பணிக்கு சமூகமளிக்கவேண்டியது கட்டாயமாகும் என்று பொது நிர்வாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில், கோவிட் தொற்றுநோய்க்கு முன்னதாக, கொள்கை முடிவாக பணிக்கு வருவதற்கு பொருத்தமான ஆடைக் குறியீட்டைக் குறிப்பிடும் அரசாங்க அதிகாரிகளுக்கு தனி சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. (அ)

## கூட்டமைப்பை...

அத்துடன் ஜனாதிபதியுடன் தீர்வுக்கான பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பில் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து எடுக்கும் முடிவுக்கு முழுமையான ஆதரவு வழங்குவது என்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தவறாது ஒவ்வொரு மாதமும் கூட்டுவது என தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கூட்டமைப்புக்குள் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் ஊடகங்களில் விமர்சனங்களை முன்வைப்பதைத் தவிர்த்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதனைப் பேசித் தீர்ப்பது என்றும் முடிவாகியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு முழுமையான ஆதரவு வழங்குவது என்றும் அங்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. முரண்பாடுகள், குறைபாடுகளைக் களைந்து கூட்டமைப்பை ஒற்றுமையுடன் தொடர்ந்தும் நகர்த்துவதற்கான முன்னெடுப்புக்களை அர்ப்பணிப்புடன் மேற்கொள்வது என பங்காளிக் கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கூட்டாக முடிவெடுத்தனர் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

## வல்வெட்டித்...

கொண்டாடப்பட்டது.

இதன்போது பொதுமக்களுக்கு 68 எள்ளுருண்டைகள், இனிப்புகள் என்பன வழங்கப்பட்டன. (அ)

## பிரபாகரனின்...

ஆனந்தத்தோடு வழங்கி மகிழ்ந்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் 68ஆவது பிறந்ததினம் நேற்று தமிழர் பிரதேசங்களில் கொண்டாப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 13ஆவது...

வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2018 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது.

மாகாணங்களுக்கு புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதற்கு சில சட்டத் தடைகள் இருப்பதால் அது நடைபெறவில்லை.

எவ்வாறாயினும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதோடு அவர்களிடமுள்ள அதிகாரங்கள் அவர்களுக்கு திருப்ப வழங்கப்படவேண்டும்-என்றார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஐ.நா. உள்ளிட்ட பொதுவெளியில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு...

சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு ஆளுநர் கடந்த 27ஆம் திகதி நியதி சட்டங்கள் என்று சொல்லப்படுகின்ற இரண்டை வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார்.

ஒன்று வாழ்வாதாரம் தொடர்பான விடயம்,மற்றையது சுற்றுலா தொடர்பான விடயம் என இரண்டு நியதிச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.

இந்த இரண்டுமே ஆளுநரின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டதும், சட்ட விரோதமானதும், முறையற்றது மாகும். மாகாண சபைகள் சம்பந்தமான அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு இது முரணானது.

மாகாண சபைச் சட்டத்தின்படி ஆளுநர் தனது அதிகாரங்களை ஜனாதிபதியின் பணிப்புரையின் பெயரால் செயல்படுத்த முடியும் என்றுள்ளது.

எனவே ஆளுநருக்கு சட்ட வாக்க அதிகாரம் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. எந்த இடத்திலும் ஆளுநர் சட்டம் இயற்றலாம் என்று குறிப்பிடப்படவில்லை.

இவர் துணிவாக எதேர்ச்சியதிகாரமாக இரண்டு நியதி சட்டங்களை பிரகடனப்படுத்தியுள்ளார். இருக்கக் கூடிய அதிகாரங்களையும், ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஆளுநர் பறித்தெடுக்கின்றார் என்பதே விடயம். அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இது பாரதூரமான ஒரு விடயம். அரசியல் ரீதியாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அரசியல் ரீதியில், எங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களையும் பறிக்கக்கூடிய ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது.

எனவே இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கு நாங்கள் தீர்மானித்து உள்ளோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஆட்டங்களை தவறவிடும் நெய்மர்!



பிரேசில் வீரர்கள் நெய்மர் மற்றும் டானிலோ ஆகியோர் காயம் காரணமாக அடுத்த குழு நிலை ஆட்டங்களில் பங்கேற்கமாட்டார்கள் என அணியின் மருத்துவர் தெரிவித்தார் என ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சேர்பியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பிரேசில் 2-0 என வெற்றியீட்டியது. இதில் பிரேசிலின் நெய்மர், டானிலோ காயமடைந்தனர்.

சேர்பிய அணியினர் நெய்மரை முடக்கும் உத்தியை கையாண்டனர். செர்பியா செய்த 12 பவுல்களில், 9 பவுல்கள் நெய்மருக்கு எதிரானவை.

இதனால், ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருந்தபோது, அவர் கணுக்காலில் காயமடைந்து, போட்டியிலிருந்து வெளியேறினார்.

“வெள்ளிக்கிழமை மதியம் நெய்மர் மற்றும் டானிலோ எம்.ஆர்.ஐ. பரிசோதனைக்கு சென்றனர், அவர்கள் இருவரின் கணுக்காலிலும் தசைநார் பாதிப்பை நாங்கள் கண்டோம்,” என்று அணியின் மருத்துவர் கூறினார்.

இதையடுத்து, பிரேசிலின் மீதமுள்ள இரண்டு உலகக் கோப்பை குரூப் ஆட்டங்களிலும் இருவரும் பங்குகொள்ள மாட்டார்கள்.

எனினும், நொக்அவுட் சுற்றில் கலமிறங்குவார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரேசில் அணியின் நட்சத்திரம் நெய்மர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட பதிவில்,

“பிரேசிலின் சீருடை அணிவதைப் பற்றி நான் உணரும் பெருமையும் அன்பும் விவரிக்க முடியாதது. பிறப்பதற்கு ஒரு நாட்டைத் தேர்ந்தெடுக்க கடவுள் எனக்கு வாய்ப்பளித்திருந்தால், அது பிரேசிலாக இருக்கும்.

எனது வாழ்க்கையில் எதுவும் கொடுக்கப்படவில்லை அல்லது எளிதாக கிடைக்கவில்லை. நான் எப்போதும் என் கனவுகள் மற்றும் எனது இலக்குகளை துரத்த வேண்டும். ஒருவருக்கு தீங்கு செய்ய விரும்புவதில்லை, ஆனால் தேவைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும்.

இன்று எனது தொழில் வாழ்க்கையின் மிகவும் கடினமான தருணங்களில் ஒன்றாக மாறியுள்ளது. எனக்கு காயம் உள்ளது. ஆம், அது எரிச்சலூட்டுகிறது. அது வலிக்கப் போகிறது. ஆனால் நான் திரும்பி வருவதற்கான வாய்ப்பு நிச்சயம். எனது நாட்டுக்கும், எனது தோழர்களுக்கும், எனக்கும் உதவ என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.” என பதிவிட்டுள்ளார். (அ)

## தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
**077 311 9298, 075 313 2805**



# துனிசியாவை வீழ்த்தி அவுஸ்திரேலியா வெற்றி

2022 உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் துனிசியாவிற்கு எதிரான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

டி குழுவிற்கான இந்த போட்டி கட்டாரில் உள்ள அல் ஜனூப் மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் முதல் பாதியின் 23 ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலிய அணியின் மிச்செல் டியூக் முதல் கோலை அடிக்க, முதல் பாதி ஆட்டத்தில் 1 -0 என அவுஸ்திரேலியா முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்காததால், அவுஸ்திரேலியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# போலந்திடம் சவூதி படுதோல்வி



பிபா உலகக்கிண்ண உதைபந்தாட்ட தொடர் கட்டாரில் நடைபெற்று வரும் நிலையில் ரசிகர்கள் எதிர்பார்த்ததை விட பல அதிர்ச்சியளிக்கும் போட்டி முடிவுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

பலம் வாய்ந்த பல அணிகள் சற்றும் எதிர்பார்க்காத அணிகளிடம் தோல்வியடைந்து வருகின்றன.

ஆர்ஜென்ரீனா அணி சவூதியிடம் வீழ்த்தமை, ஜேர்னியை ஜப்பான் வெற்றி கொண்டமை, அமெரிக்காவுடனான போட்டியை இங்கிலாந்து சமப்படுத்தியமை என ரசிகர்கள் சற்றும் எதிர்பார்க்காத பெறுபேறுகள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், நேற்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மற்றுமொரு போட்டி இடம்பெற்றுள்ளது.

ஆர்ஜென்ரீனா அணியை வெற்றி கொண்டதன் மூலம் தற்போது உலகக்கிண்ண உதைபந்து தொடரில் போலந்துடனான நேற்றைய போட்டியை சவூதி அரேபியா எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருந்து வந்தது.

எவ்வாறாயினும், குழு “சி” இல் நேற்று இடம்பெற்ற போட்டியில் போலந்து அணி 2-0 என்ற கணக்கில் சவூதி அரேபியாவை வீழ்த்தியுள்ளது.

அந்த அணி 39 மற்றும் 82ஆவது நிமிடங்களில் அற்புதமான இரு கோல்களைப் பெற்று இந்த போட்டியை வெற்றிகொண்டுள்ளது.

இதன் ஊடாக குழு “சி” இல் நொக்கவுட் சுற்றுக்கு தெரிவாகும் இரு அணிகளும் எவை என்ற கேள்வி இன்னும் சில நாட்களுக்கு தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

# சமநிலையில் முடிவடைந்த அமெ.- இங்கிலாந்து ஆட்டம்

உலகக்கிண்ண உதைபந்து தொடரின் நேற்று அதிகாலை இடம்பெற்ற அமெரிக்கா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி சமநிலையில் முடிந்தது.

ஆரம்பம் முதலே இரு அணி வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சிகளும் வெற்றி பெறவில்லை. இதனால் முதல் பாதி முடிவில் இரு அணிகளும் 0-0 என்ற கோல் கணக்கில் இருந்தன.

இரண்டாவது பாதி முடிவிலும் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.இதனாம் ஆட்டம் சமனில் முடிந்ததுடன் இரு அணிகளுக்கும் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் மூலம் குழு பி பிரிவு புள்ளி பட்டியலில் இங்கிலாந்து 4 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், ஈரான் 3 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும் உள்ளன. (அ)





# சவுதி அரேபிய வீரர்களுக்கு ரோல்ஸ் ரொய்ஸ் கார் பரிசு

உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் ஆசிய கண்டத்தின் சவுதி அரேபியா அணி யாருமே எதிர் பார்க்காத வகையில் 2 முறை சம்பியனான ஆர்ஜென்ரீனாவை 2-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சிகரமாக தோற்கடித்தது.

இந்த வெற்றியால் சவுதி அரேபியாவில் அந்நாட்டு மன்னர் மறுநாள் பொது விடுமுறை அறிவித்தார்.

இந்த நிலையில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி வரலாற்று வெற்றியை பெற்ற சவுதி அரேபிய உதைபந்து வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரோல்ஸ் ரொய்ஸ் கார் பரிசாக வழங்கப்படுமென அந்நாட்டு இளவரசர் முகமது பின் சல்மான் அல் சவுத் அறிவித்துள்ளார்.

இதுபோல விலை உயர்ந்த பரிசு வீரர்களுக்கு வழங்கப்படுவது இது முதல் முறையல்ல. 1994 ஆம் ஆண்டு பெல்ஜியத்தை வீழ்த்தியபோது இது போலவே கார் பரிசு வழங்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.